நூலகம்

இலக்கியம்

மலர் 1
இதழ் 10
ஜுன் 1996

ஆசிரியர் :
நூலக ஞானி டாக்டர் பா. பெருமாள் M.A., M.Lib., Sc., Ph.D.,



பள்ளி அறிவுக் களஞ்சியத்தில் வருங்கால மேதைகள்

பள்ளிக் கல்வித் துறை, தமிழ் நூலக உணர்வு மிக்க, பயிற்சி பெற்ற முழு நேர நூலக ஆசிரியரை தமிழக அரசு 1996-97 லேயே நியமிக்க உத்திரவிட வேண்டுகிறோம்

பெற்றோர்
இளைஞர்
கையேடு
டாக்டர்
அப்துல்
பாரி

ரங்கநாத சித்தாந்தம்

த. கிருஷ்ணமூர்த்தி

புத்தகாலயங்களில் இருக்கும் புத்தகங்கள் மக்களுக்கு ஏற்றனவாக இருக்க வேண்டுமென்பதுடன் வாசகர்கள் அவற்றைச் சுலபமாகப் பெற வசதியும் கொண்டிருக்கு வேண்டும். ஆயிரக்கணக்கில் புத்தகங்கள் வெளிவரும் இக்காலத்தில் அவற்றைத் தராதரப்படுத்தி வைத்தாலே வாசகர் தமக்கு வேண்டியவற்றை எளிதில் பெறவும், வாசகர்களுக்கும் என்ன என்ன விஷயங்களைக் குறித்து நூல்கள் இருக்கின்றன என்று எளிதில் தெரிவிக்கவும் சௌகரியப்படும்.

புத்தகப் பாகுபாட்டின் தத்துவமுறை: மனிதன், விலங்கு, தாவரம், தாது என்றெல்லாம் எப்படி வகுப்பு ரீதியில் அமைந்துள்ளனவோ அதேபோலப் புத்தகங்களும் அதனதன் வகுப்பு ரீதியில் பிரிக்கப்படுகின்றன. உலகில் எவ்வளவு பேதாபேதங்கள் காண்கிறோமோ அதே போல அவற்றின் காகித வடிவங்களான புத்தகங்களிலும் காணலாம். மனிதன் என்று நமக்குச் சட்டென எப்படிப் புலப்படுகிறதோ அதே போல ஒரு புத்தகம் இந்த வகுப்பை அல்லது இனத்தைச் சேர்ந்தது என்பது உடனே தெரிய வேண்டும். ஆசிரியர். சீ.ரா.ரங்கநாதன் இவ்வாறு புத்தகங்களைப் பாகுபடுத்தித் தெரிவிக்கச் சில அடிப்படையான கொள்கைகளைத் தமது முதிர்ந்த அநுபவ வாயிலாக வெளியிட்டுள்ளார்.

ஆண்டு மலர்
செப்டம்பர் 1996 நூலகம் இலக்கியம் சிறப்பிதழாக மலரும். மலர் 2 இதழ் 1
ஆண்டு சந்தா ரூ 120/-

அறிவு உலகத்தைச் சில நிலையான நிமித்தப்படி ரங்கநாதன் பிரிக்கிறார். மனிதன், மிருகம், சடப் பொருள் என்ற வகுப்புக்களைப் போலே அறிவு உலகத்தை மூலவர்க்கங்களென்றும், உபவர்க்கங்களென்றும் பிரித்து அவற்றைத் தோற்ற மாத்திரத்தில் அறிய, தனித்த குறியீடுகளைத் தருகிறார்.

கடையில் மல்லிகை வாங்கச் சென்றால் அங்கு மலர்ந்த பூவாகவும் மொட்டாகவும் பார்க்கிறோம். கடைக்காரன் அதனைத் தொடுத்துச் சரமாகவும் மாலையாகவும் கதம்பமாகவும் ஒவ்வோர் இடத்தே வைத்து விற்கிறான். வாடிய மல்லிகை ஒருபுறம் ஒதுக்கப்பட்டுக் கிடக்கிறது. அதைப்போல் **புத்தகங்களைப் பிரிக்க ஐந்து மூலாதாரத் தத்துவங்களை அவர் கூறுகிறார்.** புத்தகங்களின் மூலவர்க்கங்கள் இந்தப் பஞ்ச நியதிகள் மூலம் தோற்றமளிக்கும்போது, அவற்றைக் கொண்டு **நூலின் தரத்தைப் பிரித்தால் அதன் உள்ளடக்கம்** உள்ளங்கை நெல்லிக்கனி போல் தோன்றுகிறது. சுருங்கக் கூறின் இக்குறியீடுகள் **நூலில் கண்டுள்ள விஷயங்களின் சுருக் கெழுத்து மொழி பெயர்ப்பு எனலாம்.** மல்லிகை பூவாக வும், மொட்டாகவும், சரமாகவும், மாலையாகவும் இருப்பது போல் ரோஜா, செவ்வந்தி முதலிய புஷ்பங்களும் பூ, மொட்டு, மாலை என வைக்கப்பட்டிருக்கும். பூ, மொட்டு, மாலை என்பன எல்லாப் புஷ்பங்களுக்கும் பொதுவாகப் பொருத்தமானவை. அதே போல இந்தப் பஞ்ச நியதிகள் எல்லா வர்க்கங்களுக்கும் பொது வானவை.

நூலகம் இலக்கியம்
மாத இதழ்

படிக்க... பயன்பெற...
பாதுகாக்க.

ஒவ்வொரு மாதமும் மூன்றாவது வாரத்தில் வெளிவருகிறது.

ஒருவன் மனித ஜாதி யாரைத் தன் வர்க்கத்தாரென்றும், தேச ரீதியில் கவனிக்கும்போது ஒருவனை இந்தியனென்றும், தன் இனத்தானாகக் கவனிக்கும் போது தமிழனென்றும், அவனையே தன் குடும்பத்தானாகக் கருதும் போது உறவினனென்றும் மகனென்றும் எண்ணுகிறான். விலங்குகள் கூட்டத்தில் இருக்கும்போது மனிதனைத் தனியாகவும், அமெரிக்கர் ஐரோப்பியரிடையே அவனைத் தனியாக இந்தியனெனவும், குஜராத்திகள், மராட்டியர், தெலுங்கர் கூட்டத் திடையே அவனைத் தமிழனாகவும் அந்நியத் தமிழரிடையே அவனை உறவினனாகவும், உறவினர் கூட்டத்திடையே அவனை மகனாகவும் கருதுகிறான். அதுபோலவே நூல் தராதரப் பிரிவினையும் சுற்றுச் சார்புக்கு ஏற்றவாறு மூலவர்க்கம் உப

வர்க்கங்களாகவும் உட்பிரிவு களாகவும் குறுகுகின்றது.

நபர் எந்த ஊர் என்று தெரிந்த பிறகு அவன் உயரம், நிறம் முதலிய அங்க அடை யாளங்களையும் கவனிக் கிறோம். இதை மகனுக்கு மாத்திரமல்ல, உறவினருக்கு மாத்திரமல்ல, எல்லாரிடத்தி லும் பொதுவாகக் கவனிக் கிறோம். இதுபோலவே ஒரு நூலின் வர்க்கம் நிர்ணயமான பிறகு அதன் விசேஷங்களை வெளிப்படுத்தவே பஞ்ச நியதி கள் என்ற உரைகல்லில் ஆசிரி யர் ரங்கநாதன் தேய்க்கிறார். வைரக் கல்லின் விசேஷத் தைப் புரட்டிப் பார்ப்பதுப் போல் பார்க்கிறார்.

✍.......வாசகர்களே

நூல், நூலகம், நூல் வெளியீட்டு விழா, நூலாசிரியர் பதிப்பக வரலாறு, நூலகத்துறை சம்பந்தமான நுணுக்கு கள், கார்டூன் (கருத்துப் படம்) படங்களுடன் எழுதி அனுப் புங்கள்

தேர்ந்தெடுத்து வெளி யிடுவோம். உடன் செயல்படுவீர்!

1. வடிவம் (சொரூபம்); 2. சடப்பொருள் (வஸ்து அல்லது பதார்த்தம்) 3. சக்தி; 4. தேசம் (இடம்); 5. காலம் ஆகிய ஐந்து பரீட்சைகளுக்கு அது உட்படுகிறது. அவற்றின் மூலம் நூல்களின் குணா குணங்கள் அனைத்தும் வெளிப்பட்டு வருகின்றன. **இந்த எக்ஸ்ரே ஸ்ரீ ரங்க நாதனின் தனி விசேஷச் சாதனை.** இந்தத் தத்துவம் 25 வருஷங்களுக்கு மேலாகச் செய்த அநுபவ ஆராய்ச்சி யின் பலனாகும். இந்த வரு ஷங்களில் பல லட்சங்கள் கொண்ட பல நூல் நிலை யங்களை அவர் பரிபாலித்து வந்தாரென்பதுடன் பல்லா யிரக்கணக்கான புத்தகங் களைத் தராதரப்படுத்த அவரே நேரில் முயன்றிருக் கிறார். பல மாணவருக்குப் புத்தகாலய பரிபாலன போதகா சிரியராயும் இருந்திருக்கிறார். அத்துடன் பிரதேசங்களி லிருக்கும் பெரும் புத்தகால யங்களுக்குச் சென்று அங்குள்ள தராதரப் பிரிவினை முறை களையும் அறிந்து வந்துள்ளார். ஆகவே, அவரது சித்தாந்தம் கல்வி கேள்வி அநுபவ ஆராய்ச்சியின் விளைவாய்ப் பிறந்ததாகும். தோற்றத்தைக் கொண்டு ஒரு புத்தகத்தின் மூலவர்க்கத்தை நிர்ணயம் செய்த பிறகு இந்தப் பஞ்ச

நியதிகள் பிரயோகமாகின்றன. அவை உள்ளடக்கத்தை வெளிப்படுத்துகின்றன. முதலில் அதன் குணவடிவம் தெரிகிறது.

''இந்தியாவில் நடைமுதல் வருஷத் தார் ரஸ்தா திட்டம்'' என்றொரு புத்தகம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். இது என்ஜினீயரிங் மூலவர்க்கத்தைச் சேர்ந்த புத்தகம். இது சாலை வடிவத்தில் தோற்றம் அளிக்கிறது. இதனால் எந்த வஸ்துவினால் ஆன சாலை என்பதற்குத் 'தார்' என்பதாகிறது; செயல் பற்றிய கேள்விக்குத் 'திட்டம் போடுதல்' என்றாகிறது. அது 'சக்தி'யைச் சேர்ந்ததாகும். இடம் என்பதற்கு 'இந்தியா' என்ற பதிலும் காலம் என்பதற்கு 'நடைமுதல் வருஷம்' என்ற பதிலும் கிடைக்கின்றன. ஆகவே, இந்த ஐந்து நியதிகளுக்கும் இப் புத்தகம் உள்ளடங்கி இருக்கிறது. எல்லாப் புத்தகங்களும் இப்படித்தான் இருக்குமென்பதில்லை. பொதுவாக என்ஜீனீயரிங் பற்றிப் புத்தகம் இருக்கலாம். இதில் எந்த நியதியும் வெளியே தெரியாது. சாலைகளைப் பற்றிய புத்தகத்தில் வடிவம் மாத்திரம் தோன்றுகிறது. 'இந்தியச் சாலைகள்' என்ற நூலில் வடிவமும் தேசமும் தோற்றமளிக்கின்றன. 'தார் போட்ட சாலைகள்' என்பதில் வடிவமும் வஸ்துவும் சக்தியும் புலனாகின்றன. இம்மாதிரி 5 நியதிகளை வகுத்து அவற்றிற்கான குறியீடுகளுக்குத் தனித்தனி ஸ்தான அந்தஸ்தும், **கணக்கில் இருப்பது போல்** கொடுத்திருக்கிறார். **குறியீடுகளைக் கொண்டு புத்தகங்களை வரிசைக் கிரமமாக அடுக்கினால்** முதலில் என்ஜினீயரிங் நூல்களும், அடுத்தபடி சாலைகளைப் பற்றியனவும், அடுத்தபடி சாலைவிதங்களைக் குறிப்பனவும் அடுத்தபடி இந்திய சாலைகளைப் பற்றியனவும் அதனைத் தொடர்ந்து சாலைத் திட்டங்களைப் பற்றியனவுமான புத்தகங்கள் தராதரமாகப் பிரிந்து நிற்பதைக் காணலாம். இப்புத்தங்கள் அவற்றிற்குள்ளே கால தேச நியதிக்கு உட்பட்டிருப்பதால் அவற்றிலும் **ஓர் ஒழுங்கைக் காணலாம்.**

இந்த ஒழுங்கு ஏற்படுவதற்கான இந்த 5 நியதிகளைக் கற்பனை செய்தவர் ரங்க நாதன். ஆகவே, இதனை ரங்கநாத சித்தாந்தம் என்கிறோம்.

கோலன் தராசு

ஆசிரியர் ரங்கநாதனின் விபாகப் பஞ்ச மூலக் கொள் கைப் படி புத்தகங்களின் தராதரம் அறியக் கோலன் தராசு அல்லது **கோலன் புத்தகத் தராதர நிர்ணய முறை** என்பது அவராலேயே *1933* இல் **கணிக்கப் பட்டதாகும்.** இது பல பிரிட் டிஷ், அமெரிக்கப் புத்தகத் தராதரப் பிரிவினை முறை களை விடச் **சிறந்தது என விஷயமறிந்தவர் கூறுவர்.** ரங்கநாதனின் முறையை அறிய இப்போது அடிக்கடி மேலை நாட்டார் அவரை தேடி அழைப்பதிலிருந்தே இது புலப்படும். புத்தகங் களின் குணங்களை அறிந்து எடை போடுவது போல ரங்க நாதனின் கோலன் முறை தரம் பிரிப்பதால் இக்கட்டுரைக்குக் கோலன் தராசு எனப் பெயரி டப்பட்டது.

இங்கிலாந்து வைத் தியசாலைகளில் நோயாளி களுக்குப் படிக்க நூல்களை வழங்குதல்.

சென்னைக் கன்னிமாரா புத்தகசாலை போன்ற ஒரு நூலகம் பல்வேறு விஷயங் களை சம்பந்தப்பட்ட சுமார் லட்சம் புத்தகங்கள் கொண்ட இடம்: அங்கு நாம் ஏதாவது வாசிக்கலாமென்று செல் கிறோம். நாம் சாதாரணமாக அறிந்தனவும் கேட்டனவும் சில புத்தகங்களே. ஆகவே, அங்கு எந்த எந்த விஷயங் களைப் பற்றி எவ்வளவு எந்த எந்த நூல்கள் யார் யாரால் எழுதப்பட்டவை இருக்கின் றன என்பதை அறிவதே கஷ்டமாகி விடுகிறது. எனவே, நமக்குப் பிரியமான விஷயங்களைக் குறித்த புத்தகங்களையோ அல்லது ஆசிரியர்களைப் பற்றிய நூல் களையோ பற்றிக் கேட்கி றோம். **இதிலிருந்து விஷயங் களுக்குப் பிராதன ஸ்தானம் என்பது ஏற்படுகிறது.** அதனை அடுத்தே ஆசிரியர்கள், நூல் கள் போன்ற விஷயங்கள் வருகின்றன. அதனாலேயே அங்கே புத்தகங்கள் தொடர்ந்த விஷய இனவாரியாக ஓர் ஒழுங்கு முறையுடன் வைக் கப்பட்டிருப்பதைக் காண் கிறோம். புத்தக அடுக்கி லுள்ள கிரமத்தை அறிந்து நமக்கான புத்தகத்தை எடுத் துக் கொள்வது எளிதாகிறது. ஆகவே, விஷய இன வாரி யாகப் புத்தகங்கள் அடுக் கப்பட்டிருந்தாலும் பிற முறை மூலமும் வேண்டிய புத்த கங்களைப் பெறலாம்.

பெருவாரியாகப் புத் தகங்கள் சேர்க்கப்பட்டு,

நல்ல, பயனுள்ள நூல்

படிக்ககும் போது சோர்வை உண்டாக்காத நூல்கள் அனைத்தும் நல்ல, பயனுள்ள நூல்களே!

-வால்டேர்

தினமலர் - வாரமலர்
23.2.92 பக்-10

பொது ஜனங்களின் உபயோகத்திற்காக வைக்கப்பட்டிருக்கும் இடங்களிலே, இம்மாதிரி உள்ளடக்க விஷயங்களுக்கு ஏற்பத் தொடர்ந்த விஷயவாரியாக அடுத்தடுத்துப் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்தாலேயே படிப்பவருக்குச் சௌகரியமாகும்.

சின்னதொரு தோஷம்: திருத்தருப்பூண்டியில் ஒரு சிறிய புத்தகாலயம். அதற்குக் காரனேஷன் ரீடிங் ரூம் என்று பெயர். அங்கு முதலில் சில புத்தகங்கள் இருந்த காலத்தில் எண் மானக் கிரமமே உபயோகப்பட்டு வந்தது. அப்படி லக்கங்களை *1,2,3,4* என்று அடுக்குவரிசையில் முதலில் கிடைத்த புத்தகத்திற்கு முன் எண்ணும், பின்னதாக வந்ததற்கு அடுத்த எண்ணுமாகக்கொடுத்துக் கொண்டு போனார்கள். அதில் வரிசைக் கிரமம் ஒன்றே கருதப்பட்டதே ஒழிய மற்றப்படி அதன் மேலட்டை கூடக் கவனிக்கப்படவில்லை. பாஷை, ஆசிரியர், விஷயம் யாதும் கவனியாமல் லக்கங்களை வாரி வீசினார்கள். அக்காலத்தில் வேண்டும் புத்தகத்தைப் பெற ஒவ்வோர் அயிட்டமாகக் கவனிக்க வேண்டி இருந்தது. பிற்பாடு புத்தகங்கள் அதிகமானதும் வேண்டிய புத்தகங்களைப் பெற நெடுகிலும் நூற்றுக் கணக்கிலுள்ள லக்கங்களைத் தேடக் காலம் அதிகம் பிடிப்பதைக் கண்டு ஆசிரியர்களை முதல் பெயர்களாகக் கொண்டு புத்தகப் பட்டியல் தயாரானது. இப்படிப் புத்தகங்கள் நூற்றுக்கணக்கிலிருந்து ஆயிரக்கணக்கில் ஏறவும் இது ஒரு வகையிலும் பிரயோஜனப்படவில்லை. இப்படி ஆயிரக்கணக்காகப் புத்தகங்கள் சேர்ந்திருந்த காலத்திலேயே சங்கடங்கள் அதிகமாயின. குறித்த ஒரு விஷயத்தைப் பற்றிப் புத்தகம் ஏதாகிலும் உண்டா என்று ஒருவர் கேட்டபோது அகர வரிசையிலும் எண் வரிசையிலுமாகக் கவனித்துச் சொல்ல வேண்டியதாகிவிட்டது. அதனால் புத்தகாலயச் சிப்பந்திகளுக்கும் படிக்க

வந்தவருக்கும் **மெனக்கெடல்** ஏற்பட்டது.

அப்போதுங் கூடத் தலைப்புகளிலிருந்தும் நூலிலுள்ள விஷயம் சில சமயம் கடைப்பிடிக்கக் கூடாத தாகி விட்டது. சுப்பிரமணிய பாரதி என்ற நூல் வாழ்க்கைச் சரிதமா அல்லது பாரதியார் நூல்களின் விளக்கமா என்பது தலைப்பிலிருந்து தெரியவில்லை. சுப்பிரமணிய பாரதியார்; தராசு. இதன் தலைப்பிலிருந்து இது காவியமா அல்லது நாடகமா அல்லது கட்டுரையா என்பது தெரியவில்லை. இதுபோல் பல சிக்கல்கள் எழுந்தன. நூல்கள் சில ஆயிரத்திலிருந்து பல்லாயிரத்துக்குச் சென்றன. சிரமம் பெருகியது. புத்தகாலய அதிபர்கள் அவரவர் மனோ விதிப்படி மூலவர்க்கங்களுக்கு எண்களையோ எழுத்துக்களையோ, ஆசிரியரின் பெயர்களையோ தலைப்புகளாகக் கொண்டு புத்தகங்களை ஒழுங்குபடுத்தி வைத்தனர். அவர் ஆஜராகாத நாட்களிலும் அவருக்குப் பிற்காலத்திலும் இத்துறையில் மிகுந்த சிரமம் ஏற்பட்டது. திட்டமான, விதி முறைக்குட்பட்ட தராதர முறை இல்லாததே இதற்குக் காரணமாகும்.

மெல்வில் டூயி: இந்த நிலைமையிலேயே மெல்வில் டூயி என்ற அமெரிக்கர், புத்தகங்களின் உள்ளடக்கத்தைக் காட்ட, தனிக் குறியீடுகளை வகுத்தார். ஒவ்வொரு விஷயத்திற்கும் ஒவ்வொரு தனி லக்கம் கொடுக்கலாமென்றும், மூல விஷயத்திலிருந்து பிற்பாடு பல கிளை விஷயங்கள் அவரோகணமாகத் தோன்றினாலும், அவற்றிற்கு மூல விஷயத்துக்குத் தரப்பட்ட மூல லக்கத்தை அடுத்த கிளை லக்கங்களை அதே அவரோகண ரீதியில் எந்தச் சமயத்திலும் தரலாமென்றும், இதற்குத் தசாம்ச முறையைக் கையாள வேண்டுமென்றும் கூறினார். அதுவே **புத்தகத் தராதர சாஸ்திர வரலாற்றின் புதுச் சகாப்தமாகும்.** இன்றைக்கும் பல தேசங்களில் இம்முறையே கையாளப்பட்டு வருகிறது. இதனால் நூல்கள் வர்க்க ரீதியில் அதன் அதன் உபவர்க்க கிளை வர்க்கக் கட்டுக் கோப்புடன் பூட்டன், பாட்டன், தகப்பன், தநயன், பேரன், பாட்டி, தாய், மகள் என்ற ரீதியில் தாமே இடம் பெறுகின்றன. இதுமாதிரி **புத்தகங்கள் விஷய ரீதியில் ஒன்றுக்கொன்று பிணைந்து சங்கிலி போல் அமைவது வாசகர்களுக்கு மாத்திரமன்றி,**

நூலகப் பரிபாலனம் செய்ப வருக்கும் தமது கடனாற்றச் சுளுவாயிற்று.

கோலன் தராசு: டூயியின் திட்டம் நூல்களின் வர்க்கத் தராதரத்தைப் பிரித்துத் தரு கிறது. ஆனால் பல நூல்கள் ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தன வாயினும், பிற வர்க்கச் சாயையும் கொண்டிருக் கின்றன; பல முகங்களைக் காட்டுகின்றன. இந்த வேறு பாடுகளை **டூயியின் திட்ட முறை எடுத்துக்காட்டு வதாக இல்லை.** அதாவது சாமான்களைத் தோலா, பலம், சேர் என்ற வகையில் நிறுத்துத் தரும் தராசாகவே அவரது தசாம்சத் தராதர முறை இருக்கிறது. மற்றப்படி மணல், தானியம், குன்றி மணி போன்ற சிறு நிறை வித்தியாசங்களைத் தெரி விக்க முடியாத தராசு அது. அதாவது ஒரு பதார்த்தத்தின் நிறையை மணல் எடை அள விற்கும் நுணுக்கமாகச் சொல் லக் கூடியதல்ல; **ஏதோ ஓரள வுக்குக் காட்டக் கூடிய தோயாகும்.** அந்த நிலைமை யிலே சென்னைச் சர்வகலா சாலை நூலகப் பரிபாலகரா யிருந்து **சீ.ரா. ரங்கநாதன்** தமது கோலன் தராதர முறையை 1933 இல் வெளி யிட்டார். அம்முறை மணல், சிறு கடுகு, தானியம், குன்றி மணி எடை அளவையும் தெரிவிக்கும் தராசு போன்ற தாகும். மேலும் வைரங் களை எடை போடுவதுடன் நில்லாமல் பக்கவாட்டுப் பட்டைகளையும் கவனித்து அதன் குணத்தை நிர்ணயிப் பது போன்று நூலின் பல குணத்தையும் வேறு சாயை களையும் அறிந்து குறியீடு களின் மூலம் புலப்படுத்து வதாகும். அதாவது புத்தகத் தின் வர்க்கத்துடன் நில்லா

கோயில் நூலகம்

கோயிவில்லா ஊரில்
குடியிருக்க வேண்டாம்.

நூலகம் இல்லா ஊரில்
கால் வைக்க வேண்டாம்.

மல், அதன் பூரண உள்ளடக் கத்தை வெளிப்படுத்தும் முறை கோலன் விபாகத் திட்டம்.

ரங்கநாத சித்தாந்தத் தின் பஞ்ச மூலங்களான சொரூபம், சடப்பொருள், சக்தி, தேசம், காலம் ஆகிய ஐந்தும் கோலன் நிர்ணய

முறையில் பரிணமிக்கின்றன. இவ்வைந்தும் ஓரளவிற்கே டூயி திட்டத்தில் காணலாம். **கோலன் முறை எக்ஸ்ரே போன்று புத்தக உள்ளடக்கத்தைத் தன் விசேஷக் குறியீடுகள் மூலம் வெளிப்படுத்தி விடுகிறது.** அக் குறியீடுகளின் அந்தஸ்து கிரம வரிசையாக வமிசாவளிப் பட்டியல் ரீதியில் வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால் புத்தகங்களின் அடுக்கு வரிசையும் ஒன்றையொன்று தொடர்ந்ததாய்ப் பிணைந்த சங்கிலி போல் செல்லும்.

கோலன் விசேஷம்:

கோலன் முறையில் வர்க்க ரீதியிலும், பஞ்ச மூலக் கிரமத்திலும் கிளை வகுப்புக்கள் நெடுகிலும் தசாம்ச விபாக முறைப்படி செல்வதால் வகுப்புக்களின் எண்தொகை, டூயியின் தசாம்ச முறையில் கண்ட மொத்தத்தை விடக் குறைவு. ஆனால் இந்த மூலத் தலைப்புகளில் உள்ள எண்களைக் (வகுப்புகளை) குறுக்கிலும் நெடுக்கிலும் பலவிதமாக மாற்றுவதாலும் புனைவதாலும் ஏகப்பட்ட சிற்றினங்களைச் சிருஷ்டிக்க முடிகிறது. ஒரு மூல வரிசையில் 100 ம் மற்றொரு மூல வரிசையில் 100 மாகக் கிளை வகுப்புகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அவற்றை மாற்றி மாற்றிப் புனைவதால் 100X100 = 10,000 வகுப்புக்களைச் சிருஷ்டிக்க முடிகிறது. அதாவது, **100+100 = 200 குறியீடுகளைக் கொண்டு 100 X 100 = 10,000 விஷயங்களுக்கு ரங்கநாத சித்தாந்த பஞ்சமூலக் கொள்கைப்படி குறியீடுகள் சிருஷ்டிக்க முடியும். இது கோலன் திட்டத்தின் அரும் பெருஞ் சாதனை.**

புத்தகப் பயன்

புத்தகங்கள் இரு வகைப்படும். ஒரு வகையில் பொழுது போக்க உதவுகிறவை. மற்றொரு வகை, வாழ்க்கைக்கு உதவுகிறவை.

- ஜான் ரஸ்கின்.

தூங்காத நூலகம்

Library Literature Library

24 மணி S.R. ரங்கநாதன் நினைவு நூலக இலக்கிய நூலகம்.

- ☆ 400 சதுர அடி நவீன கட்டிடம்.
- ☆ தமிழ் மூலம் போதனை, பயிற்சி வகுப்புகள்
- ☆ கம்ப்யூட்டர் நூலகப் பணி அறிமுகம்
- ☆ கம்ப்யூட்டர் மூலம் நூல் விவரத் தொகுப்பு பயிற்சி (Bibliographical Data Base)
- ☆ கம்ப்யூட்டரை மாணவரே பயன்படுத்த வசதி.
- ☆ புகழ்மிக்க பேராசிரியர்களின் துணை - கவனிப்பு
- ☆ M.Sc.(L&S), MLIS, BLIS, CLIS, ஆராய்ச்சி படிப்புகள் கோலன், D.D.C., U.D.C., C.C.C., AACR-II செய்முறை பயிற்சிகள் Sears Headings உட்பட.
- ☆ இந்திராகாந்தி, சென்னை, மதுரை காமராசர், அண்ணாமலை, ஆந்திரா, திருவேங்கடவன் பல்கலைக்கழக தேர்வுகளுக்கு முறையான செய்முறை பயிற்சியுடன் பாட வகுப்புகள்.
- ☆ நூலக பருவ ஏடுகளின் புதிய தகவல்கள் அறிமுகம்.
- ☆ நூலக இலக்கிய படைப்புக்குப் பயிற்சி.
- ☆ 400 சதுர அடி Bath attached self contained தங்குமிடம்.
- ☆ சில நாட்கள் இருபாலாரும் தங்கிப் படிக்க வசதி.
- ☆ கட்டணம் கிடையாது. தாராள நன்கொடை வழங்கலாம்.
- ☆ வளர்ச்சிக்கு வ்ழிகாட்டுங்கள். ஆலோசனை தரலாம்.
- ☆ இன்னும் என்ன வேண்டும். எழுதுங்கள். உதவுவோம்.

நூலகம் இலக்கியம்,
6, மு.வ. தெரு, அரும்பாக்கம்,
சென்னை - 106.
தொலைபேசி : 484 5034
நிர்வாகி : இந்திரா பெருமாள்.

சென்னைப் பொது நூலகச் சட்டம்

கிடைக்கும் பணமும், நன்கொடைகளும், நூலகத்தின் நலனுக்கென ஏற்படுத்தப் பெறும் அறநிலையங்களிலிருந்து கிடைக்கும் வருமானங்களும், நூலகங்களுக்கென அரசினர் வழங்கும் மானியத் தொகைகளும், விதிமுறைகளின்படி ஆணைக் குழுவினர் வசூலிக்கும் கட்டணங்களும், அபராதத் தொகைகளும் ''நூலக நிதியில்'' சேர்க்கப்பட வேண்டும்.

சென்னை நகரத்திற்கான நூலக ஆணைக் குழுவினைத் தவிர, ஏனைய நூலக ஆணைக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும், அது நூலக வரியாக வசூலிக்கும் தொகையின் அளவுக்குக் குறையாமல் அரசாங்கம் நிதி வழங்கும். இந்த நிதியும் ''நூலக நிதியில்'' சேர்க்கப்படும்.

அறியாமை அகல...

நாம் எவ்வளவு படிக்கிறோமோ அதைப் பொறுத்து தான் நமது அறியாமை நம்மை விட்டு நீங்குகிறது.

ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக் குழுவும் தனது வரவு செலவிற்குச் சரியான முறையில் கணக்குகள் வைத்திருக்க வேண்டும். இந்தக் கணக்குகளை உரிய அதிகாரிகள் தணிக்கை செய்வார்கள்.

அரசிற்குரிய அதிகாரம்

எந்த ஒரு மாவட்ட நூலக ஆணைக் குழுவையாவது கலைத்து விடவோ அல்லது மாற்றி அமைக்கவோ அரசாங்கம் விரும்புமானால், அதற்குரிய காரணங்களைக் காட்டி, முன்னறிவிப்புக் கொடுத்து, விளக்கங்கள் கேட்டு அதன்பின் அவ்விதம் செய்யலாம்.

அறிக்கை - கணக்குகள் - ஆய்வு

ஒவ்வொரு நூலக ஆணைக் குழுவும், பொது அல்லது உதவி பெறும் நூலகத்தின் பொறுப்பாளரும் மாநிலப் பொதுநூலக இயக்குநருக்கு அவ்வப்போது அவர் கேட்கும் அறிக்கைகளையும், கணக்குகளையும் அனுப்பிக் கொண்டிருக்கவேண்டும்.

இயக்குநர் அல்லது அவரிடம் அதிகாரம் பெற்ற ஒருவர் பொது அல்லது உதவிபெறும் நூலகத்திற்கு அல்லது அதனுடன் இணைந்த நிறுவனத்திற்கு வந்து ஆய்ம (Inspection) நடத்தி, நடவடிக்கைகள் சட்டத்திற்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கச் சீராக நடை பெறுகின்றனவா என்பதைக் கண்டறிய அதிகாரம் உண்டு.

நூலக ஆணைக் குழு உறுப்பினர்கள் தேர்தல், ஆணைக்

குழுவின் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பேடுகள் (Minutes) வைத்திருத்தல், ஆணைக் குழுவின் தணிக்கை அறிக்கைகளை வெளியிடுதல், நூலகங்களுக்கு நிதி உதவுவதற்கான விதி முறைகள் வகுத்தல், நூலகங்களின் பணிகள் சீராகவும் தரமாகவும் நடைபெறுவதற்குரிய ஒருங்கிணைப்பு (Co-ordination) நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவை தொடர்பாகத் தேவையான விதிமுறைகளை வகுக்க அரசினருக்கு அதிகாரம் உண்டு.

சென்னைப் பொதுநூலக விதிகள்

1948-ஆம் ஆண்டு சென்னை அரசினரால் கொண்டு வரப்பட்ட சென்னைப் பொதுநூலகச் சட்டமானது 1950-ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வந்தமையினை நாம் நன்கு அறிவோம். அதுகால் நூலகங்களின் ஆட்சி முறை சரிவர நடைபெறுவதற்காக வேண்டி தமிநாடு அரசாங்கம், சென்னைப் பொதுநூலக விதிகளை ஆக்கி நமக்கு அளித்துள்ளது. அவ் விதிகள் பொதுநூலகங்களைப் பொது நூலக ஆணைக் குழுக்கள் நல்ல முறையில் நிறுவி, பொதுநூலகப் பணிகளை திறம்படி ஆற்றுவதற்கு உறுதுணையாக விளங்குகின்றன. எனவே பொதுநூலக வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்டுள்ள அனைவரும் அவ்விதிகளைப் பற்றி அறிந்து கொள்ளுதல் சாலச் சிறந்ததாகும். 28-2-1950 அன்று, 627-ஆம் எண்ணுடன் கூடிய அரசாங்க ஆணையால் பிறப்பிக்கப்பட்ட அவ்விதிகள் வருமாறு:

1. 1948 சென்னைப் பொதுநூலகச் சட்டத்தின் பிரிவுகளை 1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயலுக்குக் கொண்டு வருவதென அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. இச்சட்டத்தின் நான்காம் பிரிவின்படி, மாநிலக் கல்வி இயக்குநரே தற்காலிகமாக மாநிலப் பொதுக் கல்வி இயக்குநராகவும் பணியாற்றி வருவார்.

2. ஒரு மாவட்டத்தில் மாவட்டக் கல்வி அதிகாரி ஒருவர் மட்டுமே இருந்தால் அவர், அல்லது ஒருவருக்கு மேற்பட்ட மாவட்டக் கல்வி அதிகாரிகள் இருப்பாராயின் அவர்களில் யாரேனும் ஒருவா, மாவட்ட நூலக ஆணைக் குழுவில் ஓர் உறுப்பினராக இருப்பதுடன், அக்குழுவின் செயலாளராகவும் இருந்து வருவார்.

3. சென்னைப் பொதுநூலகச் சட்டத்தின் 12-வது பிரிவின் படி, நூலக வரியை வசூலித்து, மாவட்ட நூலக ஆணைக் குழுவிற்கு வழங்க வேண்டுமென சென்னை மாநகராட்சி ஆணையாளர் மாவட்டக் கழகத் தலைவர்கள், நகராட்சிகளின் நிருவாக அதிகாரிகள் ஆகியோருக்கு அறிவிக்கப்படுகிறது.

4. அரசிதழில் (Fort st. George Gazette) கீழ்க்காணும் அறிவிப்பு வெளியிடப்படும்:

(அ) 1949 சென்னைப் பொதுநூலகச் சட்டத்தின் 1 (3) ஆம் பிரிவு வழங்கியுள்ள அதிகாரத்தின் படி, இச்சட்டத்தின் 2 முதல் 19 பிரிவுகள் 1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செயலுக்கு வரவேண்டுமென சென்னை ஆளுநர் ஆணையிடுகிறார்.

(ஆ) 1948 சென்னைப் பொதுநூலகச் சட்டத்தின் 4-ஆம் பிரிவு வழங்கியுள்ள அதிகாரத்தின் கீழ், சென்னை மாநிலப் பொதுக் கல்வி இயக்குநரை 1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து பொது நூலக இயக்குநராகவும் ஆளுநர் நியமித்திருக்கிறார்.

(இ) 1948 சென்னைப் பொதுநூலகச் சட்டத்தின் 4 (அ) பிரிவின் கீழ், சென்னையிலுள்ள கன்னிமாரா பொதுநூலகத்தை 1950 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மத்திய நூலகமாக அங்கீகரிக்க வேண்டுமென ஆளுநர் ஆணையிடுகிறார். இந்த நூலகம், அதில் இப்பொழுது பணியாற்றும் ஊழியர்களோடு பொதுநூலக இயக்குநரின் ஆட்சியின் கீழ் வரும்.

(ஈ) 1948 சென்னைப் பொதுநூலகச் சட்டத்தின் 18 (1) ஆம் பிரிவு வழங்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பின்வரும் விதிமுறைகளை ஆளுநர் வகுக்கின்றார்:

விதி முறைகள்

அத்தியாயம் ஒன்று

மாநில நூலகக் குழு: அமைப்பு, அதிகாரம், கடமை.

1. (அ) இந்த விதிகள் 1950 சென்னைப் பொதுநூலக விதிகள் என வழங்கப்படும்.

(தொடரும்)

படிக்காத புத்தகம் கூடாது.

காந்தியடிகள் ஆங்கிலேயரிடம் மட்டுமா சிறைபட்டார்...? இல்லை எங்கள் ஊர் நூலக பீரோவில் கூடத்தான்.

அழ. வள்ளியப்பா நினைவு சிறுவர் இலக்கிய நூலகம்

ஆராய்ச்சி, தகவல் நூலகம்

- 400 சதுர அடி பரப்புள்ள நவீன கட்டடம்
- தமிழில் சுமார் 4000 சிறுவர் இலக்கிய நூல்கள் வெளிவந்திருக்கலாம்.
- அழ.வள்ளியப்பாவின் கனவை நினைவாக்குவோம்
- சிறுவர் இலக்கிய நூல் விவரத் தொகுப்பை வெளியிட நேரம் வந்தாயிற்று.
- தமிழ்ப் பேராசிரியர்கள் ஆதரவுடன் பல்கலைக் கழகங்களின் சிறுவர் இலக்கிய் ஆய்வுக்கு உதவுதல். ஊக்குவித்தல்
- மாணவர்களுக்கு தேவையான அடிப்படை தகவல்கள் அளித்தல்
- நூல்களை தொகுத்துத் தருதல்
- புதிய பொருள்களில் நூல்கள் வெளியாக பதிப்பகங்களை லற்புறுத்தல்
- 400 சதுர அடி Bath attached self contained தங்குமிடம்
- தேசிய நூற்றொகை தயாரித்தளிக்க கன்னிமாரா நூலகத்தை தத்தெடுத்தல்
- கட்டணம் இல்லை. தாராள நன்கொடை அளிக்கலாம்.

நூலகம் இலக்கியம்,
6, மு.வ.தெரு.,
அரும்பாக்கம், சென்னை - 106.
தொலைபேசி : 484 5034
நிருவாகி : இந்திரா பெருமாள்.

பாடிப் பழகு

பேராசிரியர். தங்க. சிகாமணி
57, சானகிராம் காலனி, அரும்பாக்கம்,
சென்னை - 600 106.

1. மேல் அரைவட்டம்

மேல்அரை வட்டம் போடலாம்
மெல்ல மெல்ல போடலாம்
மேடு பள்ளம் இல்லாமல்
மேன்மை யாக முடிக்கலாம்.

2. கீழ் அரைவட்டம்

கீழ்அரை வட்டம் வரையலாம்
கீழே அமர்ந்து வரையலாம்
கீரல் மாறல் இல்லாமல்
கிழமை தோறும் வரையலாம்.

3. வட்டம்

வட்டம் எட்டு வரையலாம்
வாட்ட மின்றி வரையலாம்
திட்டம் போட்டு போடலாம்
திறமை முழுதும் காட்டலாம்.

4. சுழி

குறும்பு ஆட்டைத் தேடலாம்
கொம்பில் சுழியைப் பார்க்கலாம்
சூழ்ந்து வந்து காணலாம்
சுழியை மட்டும் வரையலாம்.

5. தாத்தாத் தடி

தாத்தாத் தடியை வரையலாம்
தகுந்த முறையில் குறைக்கலாம்
தாத்தா வந்து கேட்கலாம்
தடியைத் தந்து மதிக்கலாம்.

Writers at Work :
How libraries shape the muse

Ten top writers Talk candidly about what libraries are doing right and wrong.

வாசகர்களே!

உங்கள் அபிமான தமிழ் எழுத்தாளர்களை அணுகி... இப்படி எழுதிவாங்கி அனுப்புங்களேன்.

Nancy Crampton

"I always tell people that I became a writer not because I went to school but because my mother took me to the library."

-Sandra cisneros

"A university is just a group of buildings gathered around a library."

-Shelby foote

"I know libraries are playing a role in the inner city to help young people get off drugs and stop using guns."

-Terr McMillan

"Libraries are a part of the real and imagined world of every citizen at everywhere."

-Diane Ackerman

"I don't think today's politicians appreciate the role of libraries. Anything for kids, anything cultural is the first to go."

-Judy Blume

"People often ask me how did I learn to write. I answer : The library."

-Gary provost

The writers at work - current projects

Shelby Foote — ``I'm working on a big long novel about the mississippi delta."

John Jakes — ``I'm beginning another historical novel which should take about two years to write. Todays, I don't have to write as fast as when I was writing category fiction."

Diane Ackerman — ``My next book out is titled Rarest of the Rare. It's a collection of nature essays.

``I want to find some of the world's most endangered animals and write about them and celebrate them before they disappear. I've also written half a collection of poems."

Paul Krassner — ``I'm working on a novel that is closely based on the life of my late friend Lenny Bruce. I'm calling it The 600- year Orgasm. How's that for a commerical title?"

Terry McMillan — ``I'm working on a screenplay based on Disappearing Acts and I have about six ideas for a novel. But my next project might have to be a children's book or else my son will kill me."

Judy Blume — ``I'm in between books right now. I have two ideas for one, but I never talk about them."

Gary Provost — ``I'm working on two projects a true crime and a book about the craft of writing, and i'm waiting to hear word from the publishers about my novel Baffled in Boston. It's a light comedy based on my experience as a finalist for an Landers' old job."

Gerald posner — ``I don't have a book project yet but I have several ideas for one. In the meantime, I'm writing some magazine articles."

Jerome Clark — ``I just found out my latest book, 339 Strange Occurrences, has been picked up as a Book-of-the-month-Club selection and a Quality Paperback selection."

Sandra Cisneros — ``I'm having a hard time with my novel in progress. It's called Caramelo. I've been reading parts of it out loud lately and that's forcing me to get more work done. But the novel is going to take my to hell and back before I'm through."

Beautiful, intimate, and portable

It's a sentiment shared by all the other writers in this survey. ``I love books as beautiful objects and I like how intimate and portable they are," Ackerman explains. ``I dread the idea of having to read books electronically. It would not be the same experience."

None of the writers foresee the demise of the library as we know it, either. The writers only wish American society would value them more. As John Jakes explains, ``Libraries are the cornerstone of our communities. They are the keys to our productivity and competitivencess. To put libraries at the end of the funding queue is very disconcerting and shortsighted."

தமிழக நூலக முன்னோடிகள்

நூலகப் பேராசிரியர் அ.திருமலை முத்துசாமி அவர்களின்
நூலக இலக்கிய வாழ்வு பற்றி

பேராசிரியை டாக்டர் சாரதா

'நம்பி ஆரூரான் சிற்றம்பலம்'

அடுத்த இதழில் எழுதுகிறார்.

இவர்களில் பலர் நூலக இலக்கிய முன்னோடிகளாகவும்
இருப்பது நமக்கு பெருமையாக உள்ளது.

நீங்களும் எதலாமே.

நூலகம் இலக்கியம்,
6, மு.வ.தெரு.,
அரும்பாக்கம், சென்னை - 106.
தொலைபேசி : 484 5034

கணிப்பொறிக் கவிதைகள்



நூலகம்

உருக்குளே ஒருநூலகம் இருக்கு
உதவிடும் நூல்கள் அங்கு இருக்கு
பாப்பா கதைகள் முதற்கொண்டு
பயனுறு நூல்கள் இங்கு இருக்கு

பலவித பத்திரிக்கைகள் இங்கு
இருக்கு
படித்து மகிழவே திரண்டு வாருங்கள்
அறிவைப் பெருக்கிடும் நூல்கள்
படித்து
அறிவொளி எனச்சிறந்து
விளங்கிடுங்கள்.

புத்தகங்கள் அதிகம் தேடிப்
படித்திடுங்கள்
பொது அறிவை வளர்த்து
உயர்ந்திடுங்கள்
நூலகத்தில் உறுப்பினராய்ச் சேர்ந் து
படித்திடுங்கள்
ஞாலத்தில் சிறந்து நன்கு
விளங்கிடுங்கள்.

மதுரைமாவட்டம்

சிறந்திடுவோம்

ஒண்ணும் ஒண்ணும் இரண்டு
உலகைப் பார்ப்பது கண்ணு...

இரண்டும் இரண்டும் நாலு
இலங்கையை அழித்ததோர் வாலு...

நான்கும் நான்கும் எட்டு
நாட்டின் திசைகள் எட்டு...

எட்டும் எட்டும் பதினாறு
ஏற்றமிகு செல்வம் பதினாறு...

பதினாறும் பதினாறும்
முப்பத்திரண்டு
பற்களோ மனிதர்க்கு
முப்பத்திரண்டு...

முப்பத்திரண்டும் முப்பத்திரண்டும்
அறுபத்துநான்கு
முக்கியக் கலைகள்
அறுபத்துநான்கு...

எல்லாக் கலைகளும்
பயின்றிடுவோம்
ஏற்றம் பெற்றே சிறந்திடுவோம்!

கணிப்பொறிக் கவிதைகள். இரா. ரெங்கசாமி பி.காம். டிசம்பர், 1991. பக்கம் 84
ரூ 10: நற்கனிப் பதிப்பகம் 34/3 முல்லைத்தெரு, ராயன்பட்டி - 626 526.

ஆசிரியர் அவர்களுக்கு என் அன்பான வணக்கங்கள். ஏப்ரல் மாத இதழ் கண்டேன். படித்தேன். மிகத் தரமுடன் இருந்தது. இவ்விதழ் உண்மையிலேயே ஒரு கலை பொக்கிஷம்தான். ஒரு எழுத்தாளனுக்கு வாசகரின் பாராட்டுகளை விட, அவன் சுட்டிக்காட்டும் தவறுகளே ஆசிரியரை மென்மேலும் புத்தகத்தின் தரத்தை உயர்த்தும் என்பது முற்றிலும் உண்மை. ஏப்ரல் 96 இதழ் கணிப்பொறியில் அச்சுகோர்த்து பிரிண்ட் செய்யப்பட்டுள்ளது. அருமையான தோற்றப் பொலிவினை தருகிறது. இந்த கடிதத்துடன் எனது விமர்சனங்களையும், இந்த இதழில் உள்ள அச்சுப் பிழைகளையும், எனது படைப்புகளையும் அனுப்பியுள்ளேன் ஏற்புடைய தாய் இருந்தால் பிரசுரம் செய்யுங்கள். எனது வகுப்பு மாணவர் மகேஷ் எழுதிய வாசகர் கடிதம் அருமை. நன்றி!

வாழ்க வளமுடன். தொடர்க உமது தூய தொண்டு.

இப்படிக்கு

இளைய தலைமுறை

(G. நாகராஜன்)

குறிப்பு : நூலகத் துறை தொண்டாற்ற விரும்புகின்றேன்.

தமிழக நூலக இயக்க வளர்ச்சிக்கு வினாவில் - சென்னையில் நூலக மாநாடு தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. **கருணாநிதி** அவர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.





ஆசிரியர்
டாக்டர் ரா. சீனிவாசன்

திருக்குறள் செய்திகள்

பதிப்பு 1 : 1993
பதிப்பு 2 : 1995

டாக்டர் ரா. சீனிவாசன், (இரண்டாம் பதிப்பு) வெளியீடு : அணியகம், 5, செல்லம்மாள் தெரு, சென்னை - 30, பக்கங்கள் : 208, விலை ரூ. 40/-

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவுகளுடன் 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒன்றே முக்கால் அடியுடன் கூடிய குறட்பாவில், திருவள்ளுவர், மனித இனம் தோன்றியது முதல் அழிவது வரை, தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்களைச் சொல்லியிருக்கிறார். செய்யுள் வடிவில் உள்ள திருக்குறளின் மையக் கருத்துக்களை உரை நடையில் வழங்கியிருக்கிறார், ரா. சீனிவாசன். டாக்டர் மு.வ. விரிவாக செய்ததை டாக்கடர் ரா. சீ. சுருக்கமாக எழுதித் தந்திருக்கிறார். குறளின் கருத்துக் களை எளிதில் புரிந்து கொள்ள இந்த நூல் துணைபுரியும்.

- வி. பாலு

தினமலர் 29.5.96 புதன் பக்.6

புத்தக மதிப்புரைக்கு இரண்டு நூல்களை கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பவும் :
நூலகம் இலக்கியம் 6, மு.வ.தெரு., அரும்பாக்கம், சென்னை - 106.
தொலைபேசி : 484 5034

UNIVERSITY OF MADRAS

NOTIFICATION

Applications are invited for admission to the following Post-Graduate Courses in the University Departments to the academic year 1996-97.

MASTER OF SCIENCE

Applied Geography (Credit Based System)

Library & Information Science

(2 year course) (Credit Based System)

Mathematics (Credit Based System)

Statistics (Credit Based System)

Admission to P.G. Courses in the University Departments will be based on:

The University Examination marks (Part III only excepting Language Courses) excluding the internal assessment marks; and,

The entrance examination marks.

The weightage of University Examination marks and the Entrance Examination marks will be 50% each.

THE ENTRANCE EXAMINATION WILL BE OF ONE HOUR DURATION WITH "OBJECTIVE TYPE" QUESTIONS FOR A MAXIMUM OF 50 MARKS. THE CANDIDATE HAS TO TAKE THE ENTRANCE EXAMINATION IN THE RESPECTIVE SUBJECT IN WHICH HE/SHE GRADUATED (OR) AS PER THE INSTRUCTION OF THE CONCERNED HEAD OF THE DEPARTMENT.

THE CANDIDATES WHO HAVE APPLIED FOR A PARTICULAR COURSE (INTER-DISCIPLINARY ETC.), AND WHO WILL BE TAKING EXAMINATION IN THE SUBJECT IN WHICH THEY HAVE QUALIFIED, HAVE NECESSARILY TO TAKE INSTRUCTION FROM THE HEADS OF THE DEPARTMENTS WITH REGARD TO THE PLACE AND DATE OF EXAMINATIONS.

Application can be had from the Registrar, University of Madras, Madras - 600 005 on written requisition with a DEMAND DRAFT for Rs. 100/- drawn in favour of THE REGISTRAR, UNIVERSITY OF

MADRAS, either in person or by post with a self-addressed cover (size 28x13 cms) stamped for Rs. 8/- towards ordinary postage. POSTAL ORDERS AND MONEY ORDERS WILL NOT BE ACCEPTED. The University is not responsible for any delay or loss in transit.

(Note: Separate Application form is required for each course)

LAST DATES FOR ISSUING AND RECEIVING THE FORMS ARE AS FOLLOWS:

1. Issue of Application form through post 05-06-1996
2. Issue of Application form in person at the University ...10.06.1996
3. Submission of filled-in Application form ...01-07-1996

Filled-in Application forms for Admission along with required certificates should be sent directly to the Heads of the University Departments concerned, so as to reach them before the expiry of the last date prescribed.

Applications should not be sent to the Registrar, University of Madras.

The University reserves the right to suspend the conduct of any course, if the circumstances so warrant.

University Buildings
Chepauk, Madras - 600 005.

REGISTRAR

ரூ 1000/- கொடுத்து நூலகம் இலக்கியம் மாத இதழுக்கு புரவலராக
ஆதரவு நல்குவீர்!

விற்பனையாகிறது

தினமணி மாணவர் மலர் '96

என்ன படிக்கலாம்?
எங்கு படிக்கலம்?

மாணவர் மலர் '96

எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் டூ படித்த பிறகு என்ன படிக்கலாம்?

எங்கு படிக்கலாம்?

ஒரு தகவல் களஞ்சியம்

இது போல இன்னொன்றில்லை
இத்தனைத் தகவல்கள் வேறெதிலுமில்லை
மாணவர் சேவையில் தினமணி

பக்கம் 128 விலை ரூ. 10

தினமணி சென்னை 29.5.1996 புதன் பக்கம் 10

விளம்பரம் - விமரிசனம் **''சக்கரத்தாழ்வார்''**

இதில்... உடற்பயிற்சிக் கல்வி தகவல் உண்டு. ''நூலகத் தகவல் அறிவியல் கல்வி'' பற்றி முன்னர் தினமணியில் வெளி வந்தது நினைவில் உள்ளது. அதையாவது இதில் சேர்த்திருக்கலாம்.

``A Sound mind in a sound body" sound bodyக்கு தரும் மதிப்பை, தினமணி Sound mind க்கு கொடுக்க வில்லையே! சுவர் உண்டு. சித்திரம் எழுத. புத்தி விருத்தி வேண்டாமா? நூலகத் துறைத் தகவல்களையும் பயனுள்ளது எனக் கருத **தினமணி நாளிதழ்** எப்போது முன்வரும்?

வள்ளுவர் பெண்ணுக்கு எதிரியா?

ப. மூர்த்தி, பெங்களூர்

கலைஞரின் திருக்குறள் உரையில் உங்களைக் கவர்ந்தது எந்த உரை? ஏன்?

அரசு பதில்: ஒன்றா? ஒரு முழு அதிகாரமே இருக்கிறது. திருக்குறளிலேயே மிகவும் சர்ச்சைக்குரிய அதிகாரம் 'பெண் வழிச் சேறல்' (பெண் பித்தராதல்)

தங்களை இழிவு படுத்துவதாகப் பெண்கள் போர்க் கொடி தூக்குகிற அதிகாரம்.

அந்த 10 குறள்களுக்கும் சொற்களின் அர்த்தம் மாறாமல் ஆனால் புதிய வெளிச்சம் கிடைக்கிற மாதிரி உரை எழுதியிருக்கிறார் கலைஞர்.

''அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்

பெண் ஏவல் செய்வோர்கண் இல்''

என்ற குறளுக்கு, ''அறச் செயலும் அது முடிந்ததற்கு ஏதுவாகிய பொருட் செயலும் இவ்விரண்டின் வேறாய இன்பச் செயல்களும் தம் மனைவியின் ஏவல் செய்வோர் மாட்டு இருக்காது'' என்று பரிமேலழகர்

கரடுமுரடான வார்த்தைகளில் கொஞ்சம் ரீல் சுற்றுகிறார்.

நல்ல சிந்தனைகளும் திட நெஞ்சும் உள்ளவர்கள் பெண்களுடன் சேரமாட்டார்கள் என்று சுஜாதா ஒரே போடாகப் போடுகிறார்.

இந்த இரண்டையும் விட ''ஆணவம் கொண்ட பெண்கள் இடுகின்ற ஆணைகளுக்கு அடங்கி இயங்குகின்ற பெண் பித்தர்களிடம் அறநெறிச் செயல்

களையோ சிறந்த அறிவாற்றலையோ எதிர்பார்க்க முடியாது'' என்று கலைஞர் சொல்வது ஏற்றுக் கொள்கிற மாதிரி இருக்கிறது.

அது சரி; கடவுள் வாழ்த்திற்குக் கலைஞர் எப்படி உரை எழுதியிருப்பார்? அது சஸ்பென்ஸ்.

குமுதம்
அரசு பதில்கள்
(9.5.96)

விலை
ரூ. 60/-

''என் மனைவியைப் படிக்கச் சொல்லி - திருக்குறள் கலைஞர் உரையைக் கேட்டேன். அப்பொது ''முதல் அதிகாரத்தின் தலைப்பு என்ன'' என்று கேட்டேன். ''வழிபாடு என்று எழுதியிருக்கிறது'' என்றாள். ஐந்து நிமிடம் அமைதியாய் உட்கார்ந்து விட்டேன். நம்ப மாட்டீர்கள்; இன்றைக்குத் திருவள்ளுவர் வந்தார் என்றால் - அவரே அந்த முதல் அதிகாரத்திற்கு பெயரிட வேண்டுமென்று நினைத்தால் - சத்தியமாகச் சொல்கிறேன் 'கடவுள் வாழ்த்து' என்று வைத்திருக்க மாட்டார். 'வழிபாடு' என்றுதான் தலைப்பு எழுதியிருப்பார்.''

- பேராசிரியர்
அ.ச.ஞானசம்பந்தனார்

அறிஞர்கள் பலரும் பாராட்டும் அற்புத நூல்

திருக்குறள் - கலைஞர் உரை

இப்போது பரபரப்புடன் விற்பனையாகிறது

<u>கிடைக்குமிடம்</u>:

திருமகள் நிலையம், 55 வெங்கட்நாராயணா சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017.

ஒரு நல்ல நூலைப் போல் தகுந்த நண்பனும் உறவினனும் இவ்வுலகில் எனக்கில்லை.

ஆதித்தனார் இலக்கியப் பரிசு

சிறந்த புத்தகத்துக்கு ரூ. 50 ஆயிரம்
தமிழ் அறிஞருக்கு ரூ. 50 ஆயிரம்

சென்னை, மே, 24, 1996 தமிழர் தந்தை அமரர் சி.பா. ஆதித்தனார் நினைவாக இந்த ஆண்டும் ரூ. 1 லட்சம் இலக்கியப் பரிசு வழங்கப்பட இருக்கிறது.

தமிழுக்கு அருந் தொண்டாற்றி வரும் மூத்த தமிழ் அறிஞர் ஒருவருக்கு ரூ. 50 ஆயிரமும், சிறந்த இலக்கிய நூலுக்கு ரூ.50 ஆயிரமும் ஆக இந்தப் பரிசு பிரித்து வழங்கப் படும்.

இலக்கியப் பரிசு

ஆதித்தனாரின் 15-வது நினைவு நாள் இன்று (வெள்ளிக் கிழமை) கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆதித்தனார் நினைவாக ஆண்டுதோறும் ரூ. 1 லட்சம் இலக்கியப் பரிசு வழங்கப்படும் என்று 'தினத்தந்தி' அதிபர் பா.சிவந்தி ஆதித்தன் ஒரு பரிசுத் திட்டத்தை ஏற்படுத்தியி ருக்கிறார்.

அகில இந்திய ரீதியில் இலக்கியத்துக்கா வழங்கப்படும் மிகப் பெரிய பரிசு ''ஞானபீட விருது''. அதுபோல, சிறந்த தமிழ் இலக்கியத்துக்கு வழங்கப்படும் பெரிய பரிசு ''சி.பா.ஆதித்தனார் இலக்கியப் பரிசு.''

சென்ற ஆண்டு முதுபெரும் எழுத்தாளரான நாரண. துரைக் கண்ணனுக்கு ரூ. 50 ஆயிரம் பரிசு வழங்கப்பட்டது. புகழ்பெற்ற தமிழ் எழுத்தாளர் தாமரை மணாளன் எழுதிய ''பொதிகைப் பூங்குயில்'' என்ற நூலுக்கு ரூ. 50 ஆயிமம் பரிசு அளிக்கப்பட்டது.

இந்த ஆண்டும்

இந்த ஆண்டும் இந்தப் பரிசு அளிக்கப்படுகிறது.

தமிழ் இலக்கியத்துக்கு அருந்தொண்டாற்றி வரும் முதிய தமிழ் அறிஞர் ஒருவருக்கு ரூ. 50 ஆயிரமும், சிறந்த இலக்கிய நூலுக்கு ரூ. 50 ஆயிரமும் ஆக மொத்தம் ரூ. 1 லட்சம் பரிசு கொடுக்கப்படும்.

ஆதித்தனாரின் பிறந்த நாளான செப்டம்பர் 27ந் தேதி நடக்கும் விழாவில் இந்தப் பரிசுகள் வழங்கப்படும்.

நூல்கள்

கதை, கவிதை, நாடகம், கட்டுரை என்று எல்லாத் துறையையும் சேர்ந்த நூல்களை யும் பரிசுக்கு அனுப்பி வைக்கலாம்.

கடந்த 3 ஆண்டுக்குள் முதல் பதிப்பாக வெளிவந்த நூலாக இருக்க வேண்டும். 192 பக்கத் துக்கு குறையக் கூடாது. ஆசிரியர் அல்லது பதிப்பாளர் அனுப்பி வைக்கலாம்.

ஜூன் 15ந் தேதிக்குள் வந்து சேரவேண்டும்.

அறிஞர் பெருமக்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு, பரிசுக்குரிய நூலைத் தேர்ந் தெடுக்கும்.

தமிழறிஞர்

பரிசுக்குரிய முதிய தமிழறி ஞர் பெயரை யார் வேண்டு மானாலும் சிபாரிசு செய்து எழுதி அனுப்பலாம். அவரது பணி களையும் எழுதி அனுப்ப வேண்டும்.

பரிசுக்கு உரிய ஒரு தமிழ் அறிஞரை தேர்வுக்குழு தேர்ந்து எடுக்கும்.

''ஆதித்தனார் இலக்கியப் பரிசு'', ''தினத்தந்தி'', சென்னை-600 007'' என்ற முகவரிக்கு எழுதி, மேல் விவரம் பெற்றுக் கொள்ளலாம்.

கல்வியின் பயன்

புதிய புதிய நூல்களைப் படிப்பதும் புதிய சிந்தனைகளைத் தூண்டும் வகையில் ஏற்படும் உண்மையான செயலுமே கல்வியின் பயன்.

- டாக்டர் மு.வ.

எழுத்தாளர் சுஜாதா சொல்கிறார்.

எல்லாப் பாடங்களும் தமிழில்தான் படித்தேன். இங்கி லீஷ் உட்பட சௌரிராஜ அய்யங் கார் தமிழில்தான் சொல்லித் தருவார். அதனால் பிற்காலத்தில் ஏதும் இழப்பு என் வாழ்வில் ஏற்பட்டு விட்டதாகத் தெரிய வில்லை. தேவைப்பட்ட போது தேவைப்பட்ட அளவுக்கு ஆங் கிலம் கற்று என்னால் வாழ்வில் ஓரளவுக்கு முன்னேற முடிந் திருக்கிறது. இதற்கு முக்கிய காரணமாக நான் தமிழில் படித்ததையும் சொல்வேன். தாய் மொழியில் படித்ததால் அடிப் படையாக என் மனத்தில் மழுப்ப லும் குழப்பமுமில்லாமல் பாடங் களைப் புரிந்து கொள்ள அறிவு விதைக்கப் பட்டதாகச் சொல்வேன்.

தாய்மொழியில் புத்தகங்கள் இல்லை; தாய் மொழியில் படித் தால் வேலை வாய்ப்புகள் இல்லை எனச் சொல்லி ஆங்கிய மோகத்தை நம் இளைஞர்களிடம் வளர்த்தது சுதந்தர இந்தியாவின் மிகப் பெரிய மோசடி. அதனால் நாம் எவ்வளவு இழந்திருக்கிறோம் என்பதை ஜப்பானியரையும் சீனா, கொரியா தேசத்தவர்களையும் பார்த்தால்தான் புரியும்.

நன்றி: வார இதழ். கல்கி. 26.5.1996 பக்கம் 15. 54 (43)

கம்ப்யூட்டர்

விண்டோஸ்

இன்று கம்ப்யூட்டர் உலகில் பிரபலமாகப் பேசப்படுவது விண்டோஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம் ஆகும். இது உருவான கதையே சுவாரஸ்யமானது.

அந்தக் காலத்தில் கம்ப்யூட்டரில் பணிபுரிய வேண்டுமென்றால், அவர் மிகுந்த படிப்பறிவு உள்ளவராக இருக்க வேண்டும். கம்ப்யூட்டர் மொழியில் புரோகிராம் எழுதத் தெரிந்தவராக இருக்க வேண்டும். கம்ப்யூட்டர் கட்டளைகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

1970 களில் ஐபிஎம் நிறுவனத்தின் 'பெர்சனல் கம்ப்யூட்டர்' என்று அழைக்கப்படும் 'பி.சி.க்கள் பிரபலமடைந்த போது டாஸ் (DOS) எனப்படும் ஆப்பரேட்டிங் சிஸ்டம் முன்னணிக்கு வந்தது. குறைந்த விலையுள்ள கம்ப்யூட்டர்களில் செயல்படும் சிஸ்டமாகவும், மிகக் குறைந்த கம்ப்யூட்டர் அறிவுள்ளவர்களும் நினைவு வைத்துக் கொள்வதற்கு எளிமையாக உள்ள கட்டளைகளை உள்ளடக்கியதாகவும் டாஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டம் திகழ்ந்தது. அதன் காரணமாக மூளை முடுக்கெல்லாம் 'டாஸ்' கொடிகட்டிப் பறந்தது.

1980 களில் ஆப்பிள் நிறுவனத்தின் 'மேக்கின் டோஷ்' கம்ப்யூட்டர்களில் 'மேக் சிஸ்டம்' என்னும் ஆப்பரேட்டிங் சிஸ்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. கட்டளைகள் எதனையும் நினைவு வைத்து, டைப் செய்யத் தேவையில்லை. திரையில் தோன்றும் 'விருப்பத் தேர்வில்' (Menu Options) உங்களுக்குத் தேவையானதைத் தேர்ந்தெடுத்து உங்கள் தேவையை நிறைவேற்றிக் கொள்ளலாம். எழுத்து அடிப்படையிலான கம்ப்யூட்டர் திரைகளே பயன்பாட்டில் இருந்த அந்தக் காலத்தில் வரைகலை (Graphical User Interface - GUI) அடிப்படையிலான சாஃப்ட்வேர் தொகுப்புகளை அறிமுகப்படுத்தியது ஆப்பிள் நிறுவனமாகும்.

ஆனால், ஆப்பிள் கம்ப்யூட்டரும் அதன் சாஃப்ட்வேரும் ஒரு குறிப்பிட்ட பணிக்கு மட்டுமே பயன்படுத்த முடியும் என்பதாலும், விலை மிகவும் அதிகம் என்பதாலும், ஐபிஎம் பி.சி.யும், டாஸும் பிரபலம் அடைந்த அளவுக்கு ஆப்பிள் பிரபலமடையவில்லை.

டாஸ் சிஸ்டத்தில் பதிப்பு 4.0 க்குப் பிறகு டாஸ் ஷெல் (Dos Shell) என்ற ஒரு புதிய பகுதியை

அறிமுகப்படுத்தினார்கள். டாஸ் கட்டளைகளை நினைவு வைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லாமல், மெனுத் தேர்வு அடிப்படையில் நமது பணிகளை டாஸ் ஸெல்லில் நிறைவேற்றிக் கொள்ள முடியும்.

டாஸ் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை பல நிறுவனங்கள் உருவாக்கி வெளியிட்ட போதும் மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தின் எம் எஸ் டாஸ் தான் எங்கும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. நாளடைவில், மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்தினரும், ஆப்பிள் நிறுவனத்தினரைப் போன்றே, வரைகலைத் திரை (GUI) அடிப்படையிலான 'விண்டோஸ்' என்னும் சாஃப்ட்வேர் தொகுப்பை அறிமுகப்படுத்தினர்.

விண்டோஸ், டாஸபு ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் செயல்படக் கூடிய ஒரு தொகுப்பாக இருந்தது. பி.சி.யில் இயங்கக் கூடிய டேட்டா பேஸ், வேர்டு பிராசசர், ஸ்பிரட் ஷீட் போன்ற பல்வேறு பயன்பாட்டுத் தொகுப்புகளையும் ஒருங்கிணைத்து, மவுஸின் துணை கொண்டு இயக்கக் கூடிய ஓர் ஆப்பரேட்டிங் சிஸ்டம் போலவே 'விண்டோஸ்' தொகுப்பு திகழ்ந்தது.

கீபோர்டின் துணையின்றி, கடினமான கட்டளைகளை நினைவு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியமின்றி, பல பொன்னான பணிகளை நிறைவேற்றிக் கொள்ள முடிந்ததால், விண்டோஸ், வெகுவிரைவில் 'டாஸ்' பயன்பாட்டாளர்களிடையே நீங்கா இடம் பெற்றது. டாஸ் ஆப்பரேட்டிங் துணையில்லாமல் ஒரு தனித்த ஆப்பரேட்டிங் சிஸ்டமாகவே செயல்படுமாறு விண்டோஸ் தொகுப்பை மேம்படுத்த மைக்ரோ சாஃப்ட் திட்டமிட்டது.

1995 ஆகஸ்ட்டில் மைக்ரோ சாஃப்ட்டின் விண்டோஸ்-95 என்னும் ஆப்பரேட்டிங் சிஸ்டம் வெளியிடப்பட்டது. இன்று பல கம்ப்யூட்டர் நிறுவனங்கள், விண்டோஸ் 95 சிஸ்டத்தை இலவசமாகவே பதிந்து தங்கள் கம்ப்யூட்டர்களை விற்பனை செய்கின்றனர். டேட்டாபேஸ், வேர்டு பிராசசர் போன்ற பயன்பாட்டுத் தொகுப்புகளும் விண்டோ 9ல் செயல்படும் வகையில் ஏராளமாக வெளியிடப்பட்டுள்ளன. பி.சி. உலகில் டாஸ் மெல்ல மறைந்து, விண்டோஸ் 95 பரவத் தொடங்கி விட்டது.

தினமலர்: 24.5.96

நான் என்னைப் பொறுத்த வரையில் சிந்தனையற்றவறாய் இருப்பினும் ஒரு நூல் எனக்குச் சிந்தனை அளிக்கத் தவறுவதில்லை.

- லேம்ப் (சார்லஸ்)

நூலாசிரியர் 'இலக்கியச் செல்வர்'
சி.எம்.ஏ. அப்துல் காதிர், பி.காம்.,

ஈரோடு பெரிய அக்கிராரத்தில், பெருநிலக்கிழாராகவும், தோல் வணிகராகவும் இருந்து, ஆன்மீக அறநலங்கள் செறிந்த 'குளத்துக்காரர்' ஜனாப் சி.எம். அப்துல் ரஹ்மான் அவர்களின் மைந்தராக 1937ல் பிறந்த இவர், மாசனக் கல்லூரியிலும், ஜமால் முஹம்மது கல்லூரியிலும் கல்வி பயின்றவர். பரிசுகள் பல வென்றவர்.

இவரது முதல் எழுத்தோவியம் 195ல் 'கலைமனறம்' இதழில் வெளியாயிற்று. பேராசான் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் இவர் எழுதிய உணாவுப் படையலொன்றைப் படித்து விட்டு, 'எனது உள்ளத்தைக் கவர்ந்தது' என வாழ்த்தி எழுதியபோது இவரது வயது இருபது. 1966ல் 'இஸ்லாமிய சிந்தனைகள்' என்னும் சிறு நூலினை வெளியிட்டபின், 'அல்லாஹ்வின் அழகுத் திருப்பெயர்கள்' எனும் நூலினையும் அளித்தார். சூஃபி ஞானத்தைப் பற்றிய இவரது முதற் கட்டுரை 'முஸ்லிம் முரசு' இதழின் இருபதாம் ஆண்டு மலரில் (1968) வெளியாயிற்று.

தமிழ்நாடு இஸ்லாமிய இலக்கியக் கழகத்தை 1971ல் தோற்றுவித்த இவர், புதுக்கவிதையில் ஈடுபாடு கொண்டு பல இதழ்களில், கவிதைகள், கட்டுரைகள் எழுதி வருபவர். சென்னையில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் 'தற்கால இஸ்லாமிய இலக்கியத்தில் கவிதைகள்' பற்றி ஆய்வுக் கட்டுரை வழங்கினார்.

தமது ஏற்றுமதி வாணிபத் தொடர்பில் ஐரோப்பிய நாடுகளில் பலவற்றிலும் சுற்றுப்பயணம் செய்துள்ள இவர், 1978ல் 'உம்ரா' செய்தார். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகச் சென்னையில் வசித்து வரும் இவர் பல்வேறு இலக்கிய, சமூக கலைஞான அமைப்புகளில் பெரும் பங்கேற்று வருகிறார்.

பிரார்த்தனை!

('ராத்திபத்துன் ஜலாலிய்யா'வில் உள்ள ஒப்புக் கொள்ளப்பட்டதும், நின்று ஓத வேண்டியதுமான பிரார்த்தனையின் தமிழுரை)

எங்கள் இறைவனே!

எங்களது செயல்களில் ஒரு நேர்மைப்பாடு சித்திக்கச் செய்வாயாக! உனது நல்லுதவியை எங்களுக்கு உறுதுணையாக்கி உதவுவாயாக!

எங்கள் ஆன்மாக்களின் மேலாதிக்கத்தை எங்களிடமே சாற்றிவிடாதே; கேடு சூழின் சீரமைக்க அதனால் இயலாது என்பதால்!

அனைத்தையும் அறிந்தவன் நீ! என்னை ஆதரித்து அருள்; உனது திருச்சமூகம் நோக்கியே எனது பார்வைகளையும் கரங்களையும் திருப்பியவனாய் யாசிக்கிறேன்!

என்னை நீ ஆதரிப்பதால் எனக்கு விளையும் நற்பேறுகளை அறிந்தவன் நீ; அந்தப் பேறுகளை நிரந்தர நலனாக ஆக்கி அருள்!

எங்கள் இரட்சகனே!

தக்வா' என்ற இறையச்சத்தை உறுதிமிக்கதாய் எங்களுக்கு உதிப்பாக்கித் தருவாயாக! மாபெரும் கருணையாளனே! எங்களை மன்னித்து, எங்கள் மீது கருணை பொழிவாயாக! கண்ணியமிக்கோர் யாவரிலும் மகத்தான கண்ணியம் உள்ளவனே! ஈருலக நற்பேற்றினைக் கொண்டும், இஸ்லாத்தில் இன்புற்று இருத்தலைக் கொண்டும் எங்களுக்கு ஏற்றம் தருவாயாக!

ஹாஷிம் குலக்கொழுந்து தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 'ஷ∴பாஅத்' என்னும் பரிந்துரையை எங்களுக்கு அளித்தருள்வாயாக! ஞானவான்களுக்கெல்லாம் மேலான ஞானவானே! உனது மேலாம் தரிசனத்தை எங்களுக்கு விதிப்பாக்குவாயாக!

எங்கள் ரப்பே! நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களது பொருட்டினால் எங்களது அனைத்து நாட்டங்களையும் நிறைவேற்றி அருள்வாயாக! வரையாது வழங்கும் வள்ளற்றன்மை உடையவனே! நாங்கள் இழைத்துவிட்ட பாவங்களை மன்னித்தருள்வாயாக!

நித்திய ஜீவனே! நிலையானவனே! எங்கள் இதயங்களை உயிர்ப்புள்ளதாக்கி உயர்த்துவாயாக! எங்களது சன்மார்க்கமும், உலக வாழ்வும் சீரும் சிறப்புமாய்ச் செழித்திருக்கச் செய்தருள்வாயாக!

ஆமீன்! ஆமீன்!! யாரப்பில் ஆலமீன்!!!

எல்லாப் புகழும் இறைவனுக்கே!

நூலகத் தந்தை அரங்கநாதன் வாழ்க்கைக் காவியம்

முத்தமிழ்க் கவிஞர்
டாக்டர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன்

தாம்பரம் கிறித்தவக் கல்லூரி

கட்டிக் கொடுக்காத காடு! - நடுவே
கல்வி வளர்க்கின்ற வீடு!
கொட்டிக் கிடக்கின்ற அழகு! - பார்த்துக்
குதித்துக் கவிபாடி எழுது!

வானைத் தொடுகின்ற மரங்கள்! - இடையில்
வாழத் துடிக்கின்ற செடிகள்!
தேனை ஒளிக்காத மலர்கள்! - அவற்றைத்
தீண்ட மறுக்காத தென்றல்!

கண்ணைக் கவர்கின்ற இலைகள்! - நம்
கையில் கிடைக்காத கிளைகள்!
மண்ணை மறக்காத கொடிகள்! - கதிரோன்
மட்டும் நுழையாத இடங்கள்!

வண்டு திரிகின்ற சோலை! - அங்கு
மாணவர் கற்பதே வேலை!
தொண்டு விரிக்கின்ற சாலை! - இருளைத்
துரத்தி விடிகின்ற காலை!

எறும்புகள் ஊர்வலமும் நடக்கும்! - மேலும்
எண்ணிலாப் பாம்புகளும் கிடக்கும்!
வெறுக்காமல் எல்லோர்க்கும் பாடம் - வழங்க
விரும்பிடும் கல்லூரிக் கூடம்!

கிறித்தவக் கல்லூரி வாசல்! - கல்வி
கேள்விகள் ஆடுகின்ற ஊசல்!
குறிக்கோள் விளக்கேந்தும் மாடம் - புயல்
குறுக்கிட்டால் அஞ்சாத ஓடம்!

கல்விக் கப்பல் அரங்கநாதன்

கல்லூரி மரநிழலில் அரங்க நாதன்
கணிதத்தை மாணவர்க்குச் சொல்லி வைத்தான்!
'வல்லாளன் கணிதத்தில்' என்று சொல்லி
வந்துவந்து மாணவர்கள் ஐயம் கேட்டார்!
சொல்லாடும் போக்கினிலே நுணுக்க மெல்லாம்
சுவையோடு சொல்லியதால் பெருமை பெற்றான்!
கல்லாமல் இருக்கவே கூடா தென்று
கற்பித்தான்! பலபேரைக் கற்க வைத்தான்!

'பொன்னில்லை என்பதனால் ஏழை மக்கள்
புல்பூண்டா? சொத்துக்கள் பலவும் தேடி
முன்னவர்கள் வைக்கவில்லை என்ப தாலே
மூலையிலே கிடப்பதுதான் அழகா?' என்று
சின்னவனாய் இருக்கின்ற போதே நெஞ்சம்
சிலிர்த்தெழுந்தான்! தினந்தோறும் கற்ற தாலே
தென்திசையில் கதிரவன்போல் விளங்கு கின்றான்!
தெரியாத கணிதமெல்லாம் விளக்கு கின்றான்!

ஏற்றுமதி நெஞ்சத்தில் செய்த தெல்லாம்
இறக்குமதி செய்கின்றான்! இவன்முன் கப்பல்
தோற்றுவிடும்! "இவன்பெரிய கல்விக் கப்பல்!
துறைமுகத்தில் திரள்வதுபோல் திரள்வோம்! நம்மை
ஏற்றுகின்ற கப்பலென இவனைக் கொள்வோம்
எப்படியும் வெற்றியென்னும் கரையில் சேர்ப்பான்!
போற்றிடுவோம்!" எனப்புகழ்ந்தே அரங்க நாதன்
பொற்கரத்தை அன்றுபலர் பிடித்துக் கொண்டார்!

வறுமையிலே இருக்கின்ற அரங்க நாதன்
வாழ்க்கையினை அறிந்துகொண்ட மாண வர்கள்
வெறுக்கவில்லை! தனிப்பாடம் நடத்து மாறு
விரும்பிவந்து பணம்கொடுத்தார்! தயங்கும் போதும்,
"மறுக்காதீர்! நீர்எங்கள் அண்ணன்!" என்றார்.
மாசற்ற அன்புக்கே பணிந்தான்! ஏற்றான்!
பொறுமையினால் வறுமையினை அடக்கி வைத்தான்!
புன்னகையால் வெட்கமுறத் தோற்க டித்தான்!

ஆசிரியப் பயிற்சி பெறுதல்

வாயிருந்தால் கல்வியினைப் பயிற்று விக்க
வாய்ப்பளிக்கும் கல்லூரி! சைதாப் பேட்டை
போயிருந்தால் ஆசிரியப் பயிற்சி தந்து
புகழ்பெற்று விளங்குவதைக் காண்பார்! அங்கே
ஆயிரத்துத் தொள்ளாயி ரத்துக் குப்பின்
அடுத்துவந்த பதினாறாம் ஆண்டில் கல்வித்
தாயினைப்போல் இருப்பதற்கே அரங்க நாதன்
தகுதிபெற ஆசிரியப் பயிற்சி பெற்றான்!

நடந்தே செல்லுதல்

திருவல்லிக் கேணியிலே குடியிருந்தான்!
தினந்தோறும் நடந்திடுவான் சைதாப் பேட்டை!
ஒருபழைய மிதிவண்டி அவனுக் கில்லை
ஓயாத காலிரண்டே இருந்த சொத்து!
வருந்துவதும் வருத்துவதும் அவனுக் கில்லை
மனமாரக் கல்வியினைக் காதலித்தான்!
விருந்துண்ண வழியில்லா நாளில் உண்மை
வீரனைப்போல் தலைநிமிர்ந்து நடக்க லானான்!

நடந்தானே! நடந்தானே! வாழ்வில் அந்த
நம்பிக்கைச் செல்வம்போல் செல்வம் உண்டா?
நடந்தானே! நடந்தானே! நெஞ்சில் கொண்ட
நல்லெண்ணச் செல்வம்போல் செல்வம் உண்டா?
நடந்தானே! நடந்தானே! உழைப்பில் காணும்
நல்லழகின் சிரிப்பைப்போல் அழகும் உண்டா?
நடந்தானே! நடந்தானே! சென்னை தன்பின்
நடப்பதுபோல் முன்நடந்து காட்டி னானே!

ஏழை இளைஞர்களுக்குப் பாடமாய்த் திகழ்ந்தான்

பணமில்லா இளைஞர்கள் அரங்கன் வாழ்வைப்
பார்த்தேனும் தெரிந்துகொள்வீர்! ஊக்கம் உள்ள
மனமில்லை என்றால்தான் பெரிய துன்பம்!
மற்றவையோ கொசுவைப்போல் பறந்து போகும்!
துணிவில்லை என்பதுதான் பெரிய வெட்கம்!
துடைத்தெறிய வேண்டியதோர் பீடை! அச்சம்

இனியில்லை எனமுயன்றால் தடைகள் யாவும்
இடுப்பொடியும்! மூக்குடையும்! விழுந்தே போகும்!

நெஞ்சத்தின் வலிமையொன்றே வாழ்க்கை! எண்ணம்
நெல்லாக இருந்துவிட்டால் அதுவே வெற்றி!
நெஞ்சத்தின் வீரம்தான் வாழ்க்கை! உண்மை
நீராகப் பாய்ந்துவந்தால் விளைச்சல் உண்டு!
நெஞ்சத்தின் நற்பண்பே வாழ்க்கை! அன்பு
நிழலாகப் படர்ந்திருந்தால் இன்பம் உண்டு!
நெஞ்சத்தைப் பண்படுத்தி அரங்க நாதன்
நெருங்காமல் துன்பத்தை விரட்டி வந்தான்!

கணித மன்றத்தின் செயலாளன்

கணிதத்தில் சிறந்தவனாய் இருந்த தாலே
கணிதமன்றச் செயலாளன் ஆனான்! எந்த
வணிகத்தில் ஆனாலும் கணக்கில் லாமல்
வரவறிய முடிவதில்லை! அதனால் யாரும்
பணிகற்க வேண்டுமென்றால் கணிதம் என்னும்
படியேறி வரவேண்டும்! எண்கள் வந்தே
அணி அணியாய்ப் பலஉண்மை உணர்த்தும் என்ற
அறிவியலை மன்றத்தில் வளர்க்க லானான்!

கூட்டங்கள் பலநடத்தி வைத்தான்! அங்கே
கூடியவர் கணக்கறிவைத் தூண்டச் செய்தான்!
தீட்டிவந்த கட்டுரைகள் படிக்கச் சொன்னான்
தெரியாத உண்மைகளைத் தெரிய வைத்தான்!
ஊட்டுகின்ற உணவுக்கும் மேலாய் நிற்கும்
ஒப்பற்ற கணக்கமுதம் உண்ணச் செய்தான்!
காட்டுகின்ற ஆர்வத்தால் உழைப்பால் நாளும்
கணிதமன்றம் மெல்லமெல்ல வளர்ச்சி காணும்!

திக்குவாய் அரங்கநாதன்

திறமைபல பெற்றிருந்தும் அரங்க நாதன்
திக்குவாயால் நலிவுற்று வருந்த லானான்!
குறைதிருந்த வழியின்றி வாடு கின்றான்!
கோலமணி மாடத்தில் குறையா? வந்த
கறைஅகல வேண்டுமென விரும்பு கின்றான்!
கனிவுடனே ஆறுதல்யார் சொல்வார்? இந்த
முறைஅவனே சோதனையில் சிக்கிக் கொண்டான்
முள்தைத்த உணர்வுகொண்டான்! கலங்கு கின்றான்!

''மன்றத்தின் தொடக்கவிழா நிகழும் போது
வழங்குகின்ற நன்றிஉரை செயலர் சொல்வார்''
என்றவொரு கட்டாயம் வந்த தாலே,
''என்வாயோ திக்குவாயாம்! என்ன செய்வேன்?
இன்றைக்குப் பரிவுகொள்வீர்!'' என்று கேட்டான்.
எவருமதை ஏற்கவில்லை! அவனே சொல்ல
அன்றுவிதி செய்தார்கள்! அதுவும் நன்றே!
அந்தவிதி தலைவிதியைத் தூளாக் கிற்றே!

விழாவிலே விழாதவன்!

விழாமேடை ஏறிநின்ற அரங்க நாதன்
விழாதபடி முதல்படியைத் தொடங்கு கின்றான்!
அழாவண்ணம் தன் வாயால் பேசு கின்றான்
அறாவண்ணம் சொற்றொடர்கள் அமைத்தான்! யாரும்
எழாவண்ணம் கூட்டத்தைக் கவர்ந்தான்! சான்றோர்
எவ்வண்ணம் அமர்ந்தாரோ அவ்வண்ணம்தான்!
''தொழாவண்ணம் இருப்பதற்கு முடிய வில்லை
தொட்டவண்ணம் இருக்கின்றோம்'' என்னும் கூட்டம்!

கண்ணிரண்டை மூடிவைத்தான்! வாயை மட்டும்
கருத்துக்கள் சொல்லிவர அனுமதித்தான்!
முன்னிருப்போர் முகமெல்லாம் மறந்தே போனான்!
மூத்தவர்கள், பேரறிஞர் நினைவே இல்லை!
தன்னையொரு சிலைபோல ஆக்கிக் கொண்டான்
தடையின்றிப் பிழையின்றி நன்றி சொன்னான்!
''என்ன இது? பெரியவிந்தை? திக்கு வாயா
இவ்விடத்தில் பேசியது?'' வியந்தார் கேட்டோர்!

மந்திரங்கள் செய்யவில்லை அரங்க நாதன்!
மனம்முற்றும் பேச்சினிலே ஒன்ற வைத்தான்
தந்திரங்கள் செய்யவில்லை! செயலில் இந்தத்
தரணியையே மறந்துநின்றான்! விழாவைக் காண
வந்திருந்தோர் எல்லோரும் வாழ்த்து மாறு
வாய்ச்சொல்லை வரிசையிலே அனுப்பி வைத்தான்!
எந்தவொரு விழாவினிலும் பேசு கின்ற
எழுச்சியினை இந்தவிழா அளிக்கக் கண்டான்!

(வளரும்)

அது ஒரு காவியம்

தமிழக முதல்வர் கலைஞர் மு.கருணாநிதி முதன் முறையாக முதலமைச்சரான போது எனக்கு அம்பரசன் என்பவரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. இவர் 'முன்மொழி' என்னும் இதழின் ஆசிரியர் என்ற குறிப்பு இருந்தது. முகப்பேரு அவர் இருப்பிடம். அவர் கலைஞரைப் பற்றிய கவிதைத் தொகுப்பு வெளியிடுவதாகவும், அதில் சேர்க்க ஒரு கவிதை எழுதி அனுப்புமாறும் கேட்டிருந்தார். இருவாரங்களுக்குப் பின்பு மீண்டும் அதை நினைவூட்டி ஒரு கடிதம் அனுப்பினார்.

அவர் யார் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் கலைஞரைத் தெரியும். 'கயிற்றில் தொங்கிய கணபதி' நூல் எழுதிய காலம்முதல் அறிவேன். நண்பர் மு. நமசிவாயத்தின் முன்னேற்றப் பண்ணையில் சில முறை பார்த்துள்ளேன். அனைத்துக்கும் மேலாக, படைப்பிலக்கியத் திறன் மிகுந்த அரசியல்வாதிகளில் தலை சிறந்தவர்.

அதனால் கலைஞரைப் பற்றிச் சிறுவர்க்குச் சொல்வது போல ஒரு பாடல் எழுதி அனுப்பினேன். மாதங்கள் பல சென்றன. 'தொகுப்பு நூல் வெளி வந்ததா?' என்று கேட்டுக் கடிதம் எழுதினேன். பதில் இல்லை. அதன் பின்பும் இருமுறை கடிதம் எழுதினேன். பதில் இல்லை.

அந்தக் கவிதைத் தொகுப்பு வெளி வந்ததா? அதில் என் பாடல் இடம் பெற்றதா? இரண்டும் தெரியாது. அதன்பின் அறிமுகம் இல்லாதவர் இவ்வாறு கதை / கவிதை கேட்டால் அனுப்புவதில்லை.

அன்று கலைஞர் பற்றி எழுதிய கவிதையை இன்று (1995) "பூ வண்ணனின் பாவண்ணம்" தொகுதியில் வழங்கி மகிழ்கிறேன்.

டாக்டர் பூவண்ணன்

அது ஒரு காவியம்

ஆயிரம் விண்மீன் கொண்ட
அரசியல் வானில் என்றும்
தேயுதல் இலாத நிலவாய்த்
திகழ்பவர் கலைஞர், தம்பி!

ஆயிரம் உறவோர் கொண்ட
அகிலமாம் குடும்பத் துள்ளே
தாயினைப் போல உன்னைத்
தாங்குவார் கலைஞர், தம்பி!

ஆயிரம் மலர்கள் கொண்ட
அழகிய தோட்டத் துள்ளே
சேயிதழ்க் கமல மாகச்
சிறப்பவர் கலைஞர், தம்பி!

ஆயிரம் தலைவர் பெற்ற
அரும்புகழ் ஒன்று சேர்ந்தால்
பாயிரம்; கலைஞர் புகழோ
காவியம், அறிவாய், தம்பி!





டாக்டர் பூவண்ணனின் இந்த இரு நூல்களின் அறிமுக விழா சென்னையில் 1_6_1996இல் வெகு விமரிசையாக நடந்தது. கலைமாமணி டாக்டர் விக்ரமன், டாக்டர் சி. பாலசுப்ரமணியம், மானமிகு இரா. முத்துகுமாரசாமி, டாக்டர் முத்துகுமரன் கலந்து கொண்டு, கலைமாமணி பட்டம், சாகித்ய அகாதமி விருது, ஞான பீட விருது போன்றவைகள் விரைவில் பூவண்ணனுக்கு அளித்து பாராட்டப்பட வேண்டும் என வாழ்த்திப் பேசினர்.

> மனித் வர்க்கம் எண்ணியது செய்தது, பெற்றது, இருந்தது ஆகிய அனைத்தும் புத்தகங்களின் பக்கங்களில் அற்புதப் பாதுகாப்பில் இருக்கின்றன.
>
> - கார்லைல்.

பாலருக்குப் போதனை

- த. கிருஷ்ணமூர்த்தி

தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பது பழமொழி. ஆகவே பாலருக்குச் சிறு வயதிலேயே புத்தக சாலைப் பழக்கம் ஏற்படு மானால், அது நாளடைவில் இயல்பாகி, புத்தகசாலையின் முழுப்பயனையும் அவர்கள் அநுபவிக்க இயலும். பாலர்கள் தம் இஷ்டப்படி புத்தகசாலை சென்று அங்குள்ள புத்தகச் சேகரிப்பை அநுபவிக்க ஏற் படுத்தப்பட்ட சோதனைக் கூடமே (Laboratory) புத்தக சாலை என்பதை அவர்கள் இளமனசில் நன்கு பதியச் செய்யவேண்டும்.

பையன்களைப் பொதுப் புத்தகசாலை ஒன் றிற்கோ அது இல்லாத் இடத் தில் கல்விச்சாலையின் புத்க சாலைக்கோ அழைத்துச் சென்று, புத்தகங்கள் ஒழுங்கு படுத்தித் தராதரக் கிரமத்து டன் வைக்கப்பட்டிருக்கும் வித்தையும், அங்குள்ள புத்தகங் களை எவ்வெவ் வகையில் உபயோகிக்கலாம், பூராவும் அநுபவிப்பது எப்படி என்ப வற்றையும் விளக்க வேண்டும். புத்தகசாலை விதி முறைகளை விளக்க அவை வாசிப்பவர் களின் நன்மைக்காக ஏற்படுத் தப்பட்டன என்பதை விளக்கு தல் அவசியம். உதாரணமாகச் சஞ்சிகைகளை அது அது வைத் திருக்கும் இடத்திலேயே உட் கார்ந்து அங்கேயே படித்து வைத்து விட்டுப் போகவேண்டு மென்பது விதி. சஞ்சிகை அறையில் பல்வேறு சஞ்சிகை கள் படிக்க வைத்திருப்பதைக் காணலாம். நூற்றுக்கணக்கில் சஞ்சிகைகள் வரும் ஒரு புத்தக சாலையில், அந்த அந்த விஷயத்தைச் சேர்ந்த சஞ்சிகை கள் ஒருங்கே இருக்குமானால், படிக்க வருவோர் தாம் நாடி வந்த விஷயத்தைக் குறித்த பத்திரிகைகள் எங்கே இருக் கின்றன எனத் தேடி அலை யாது ஓரிடத்திலேயே காணச் சௌகரியப்படும். அதே இடத் திலேயே வைத்து வாசித்தாலே, போகும்போது மறக்காது அதற் கான இடத்தில் வைத்துவிட்டுச் செல்லவும் சௌகரியப்படும். ஒருவர் ஒரு சஞ்சிகையைப் படிக்கும்போது, அதனையே நாடி வரும் வேறொருவர் முதலில் வந்தவர் அச்சஞ்சிகை

இருக்க வேண்டிய இடத்தருகிலேயே வைத்துக் கொண்டு வாசிப்பாரானால், (புதிதாக வந்தவர்) அச்சஞ்சிகையை எங்கே கலந்து கிடக்கிறது என்று தேடாது இருப்பிடம் அறியச் சற்று தாமதிக்கலாம். அப்படி அல்லாது அச்சஞ்சிகை வேற்றிடம் கொண்டு போகப்பட்டிருந்தால், அத்தகைய சஞ்சிகை அப்புத்தகசாலைக்கே வரவில்லையோ அல்லது வருவது காணாமற் போய்விட்டதோ என எண்ணி விடலாம். இது போல ஒவ்வொரு விதி முறையும் வாசகர்களின் நன்மையைக் கருதி ஏற்பட்டது.

ஒரு புத்தகத்தை எடுத்து அதிலுள்ள தலைப்புப் பக்கம் அட்டை, அர்ப்பணம், முகவுரை, சிறப்புரை, பதிப்பு, உள்ளடக்கம், அச்சு, உரிமை, பொருளகராதி (Index) முதலிய பாகங்களின் விசேஷ லட்சணங்கள் என்ன என்பதை அறிய வேண்டும். சில புத்தகங்களில் அதன் ஆசிரியருக்குப் பயன்பட்ட பிற நூல்களின் ஜாபிதா (Bibliography) இருக்கும். இவற்றைப் பாலர்களுக்கு விளக்குதல் அவசியம். முகவுரை புத்தகத்தின் நோக்கத்தையும், உள் தத்துவத்தையும் விளக்கும். தலைப்புப் பக்கம் நூலாசிரியரைத் தெரிவிக்கும்; பதிப்பு வருஷத்தைக் காட்டும். புத்தகசாலைப் புத்தகப் பட்டியல் முறையை (நவீன 'கார்டு' பட்டியல் முறையானால்) அதன் ஒழுங்கு முறைமை, அதற்கான பெட்டியின் கட்டுக் கோப்பு, இதர புத்தக விலையின் உபகரணங்கள் இவற்றைக் காட்டி அவற்றின் பலா பலனைச் சுருக்கமாகப் போதித்தல் நல்லது. புத்தகங்கள் பல்வேறு தொடர்களில் அளவு, பாஷை, இன்னோரன்ன விஷயங்களைக் கொண்டு பிரித்துப் பிரித்து (Sequences) வைக்கப்பட்டிருப்பதையும், இந்தப் பாகுபாட்டின் அவசியத்தையும் பாலருக்குக் காண்பிக்கலாம். இவை அந்த அந்தப் புத்தகசாலை ஏற்பாடுகளுக்கு• ஏற்ப மாறுபடும்.

பெரிய புத்தக சாலையானால் அங்கே புத்தகச் சேகர அறை, சஞ்சிகை அறை, வாசிப்பு அறை முதலியவற்றைக் காட்டி அவை நடக்கும் முறையை விளக்கலாம். புத்தகம் எடுத்துச் செல்லும் விதமும், வரவு வைக்கும் முறையும் இடங்களுக்கு ஏற்ப அங்குள்ள முறைப்படி மாறும். வகுப்பு ஆசிரியர் புதுப் புத்தகம் ஒன்றை எடுத்து வைத்துக் கொண்டு, அதனை முதல்முதல்

பிரிக்கையில் பைண்டிங் பிடிப்பாக இருக்குமாதலால், ஜாக்கிரதையாகப் பிரித்துக்காட்டி அவ்வாறு செய்யாது போனால் பைண்டிங் முறிந்து விடும் என்றும், புத்தக நடுவிலும் பிற்பாடு கால் பாகத்திலும் இம்முறைப்படி புதுப் புத்தகங்களைப் பிரிக்க வேண்டும் என்றும் விளக்கிக் காட்ட வேண்டும். புத்தகங்களில் அடையாளத்துக்குப் பென்சில்களையோ, வேறொரு புத்தகத்தையோ மற்றப்படி தடிப்பானது எதையுமோ வைப்பதும், அதனை மூடி அதன்மேல் ஏதாகிலும் கனமான பொருளை வைப்பதும் பைண்டிங்கை எகிறச் செய்து பிய்த்து விடும். வேர்வைக் கையினாலோ, ஈரக்கையினாலோ புத்தகங்களைத் தொடுவது புத்தகப் பைண்டிங் நிறத்தைப் பாழ்படுத்திவிடும். அழுக்குச் சேர்ந்த புத்தகங்கள் நோய்க் கிருமிகளின் வாச ஸ்தலமாகி விடும். சைக்கிள்களில் புத்தகங்களை வைத்துக் கட்டும்போது, பக்க ஓரங்களை வளையக் கட்டுவதும், தூற்றல் போடும் போது, முகத்திற்கு எதிரே புத்தகத்தைப் பிடிப்பதும் அவற்றின் ஆயுளைக் குறைத்து விடும். இதனால் அடிக்கடி ஒரே புத்தகத்தைப் புத்தக சாலை பல முறை வாங்க வேண்டி வருகிறது. பல சமயம் புதுப் பைண்டிங் செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே, புத்தகங்களை ஜாக்கிரதையாகக் கையாளுவோமானால், இம்மாதிரியான செலவு குறைந்து, அந்த மிச்சத்தால் வேறு தேவைப்பட்ட பல புத்தகங்களை வாங்க முடியும்.

இச்சமயத்தில் பொது ஸ்தலங்களில் யாரும் நடக்க வேண்டிய முறையையும், பிரஜா கடமையையும் போதிக்கலாம். ஒரு புத்தகசாலையின் விதி முறைப்படி சிறுவனாக இருக்கும் காலத்திலேயே ஒழுக ஒருவன் பழக்கப்பட்டு விட்டானேயாகில் அவன் வயதான காலத்தில் தேசத்தின் சிறந்த பிரஜையாவான். குறிப்பிட்ட தவணைக் காலத்தில் புத்தகங்களைப் படிக்கத் துடிப்போருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இம்மாதிரி பொது ஸ்தலத்தில் யாவருக்கும் புத்தகங்கள் பொதுவாக வைக்கப்பட்டால், அவரவர் தனித்தனியாகச் செலவழிப்பது குறைந்த மிச்சப்படுத்தும் தொகை புதிதாக வேறு நூல்கள் வாங்கப் பயன்படுகிறது. பரஸ்பர ஒத்துழைப்பினால் இத்துறையில் நன்மை ஏற்படுவது போலவே இதரத் துறைகளிலும் ஏற்படுமென்றும், இதன் பரந்த இடமே ராஜாங்கம் என்றும், அத்தகைய ஒத்துழைப்புள்ள தேசம்

சிறந்து விளங்குமென்றும் பாலர் மனசில் படிய விளக்க வேண்டும்.

புத்தகப் பட்டியல் என்றால், அது புத்தகசாலை யிலுள்ள புத்தகங்கள் அனைத் தையும், அதிலுள்ள தனி விசேஷங்களையும் காட்டும் விஷயக் குறிப்பகராதி புத்தகத் தலைப்பிலோ, ஆசிரியர் தலைப்பிலோ, விஷயத் தலைப் பிலோ நூல்களைக் காணலாம். புத்தகப் பட்டியல் பெட்டியில் காணப்படும் வழி காட்டி கார்டு (Guide cards), சுட்டுக் கார்டு (Cross reference), குறுக்குக் கட்டுக் கார்டு (Cross index) முதலியவற்றையும், பெட்டியின் அங்க லட்சணங் களையும், கார்டுகள் எந்த நியதியில் வைக்கப்பட்டிருக் கின்றன என்பதையும் பாலருக் குச் சுருக்கமாகப் புகட்ட வேண்டும். இதற்கும் அகராதிச் சொல் அடுக்குக் கிரமத்திற்கும் உள்ள பேதா பேதங்களை இங்கு விளக்கலாம். பட்டிய லில் நூலாசிரியர், தொகுப்ப வர், சோதித்துத் திருத்தியவர் என்றெல்லாம் குறிப்பிட்டி ருப்பதன் அர்த்தம் யாது என்று கூறவேண்டும். இவை ஒன்றுக் கொன்று உள்ள சம்பந்தத்தைக் காட்டுவதுடன், மாறு பெயரில் தேடினாலும் தேடுவது கிடைக்கும்படிச் செய்யும்.

அடுத்தபடி அகராதி களை (Dictionary)க் கொண்டு வந்து அரும்பதவுரைகளை அறிவது எப்படி, பதப்பொரு ளைத் தவிர அகராதியில் காணக்கூடிய இதர விஷயம் என்ன, அகராதிப் பக்கங்களில் காணப்படும் தலைப்பு, எழுத் துக்களின் நோக்கம், அகராதி ஆரம்பத்தில் காணப்படும் குறியீடு, சங்கேதங்களின் அர்த்தம், ஒரு பதத்திற்கு இருக்கும் பல அர்த்தங்களில் தேட வந்த இடத்துக்கு எது பொருத்தமென்ன அறிவது, சொற்களின் மூல தாதுக்கள் எவை, அவை எப்படி எப்படி மாறுதல்களை அடைகின்றன என்பதை அகராதி எவ்வளவு தூரம் காட்டும், உச்சரிப்பு, எழுத்துக் கூட்டல் இவற்றில் காணப்படும் வித்தியாசம் இவை குறித்துச் சிறுவர்களுக் குக் காட்ட வேண்டும். அபிதான சிந்தாமணி, கலைக் களஞ்சியம், சூளாமணி நிகண்டு, உரிச்சொல் நிகண்டு, கலைச்சொற்கள், சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி, சதுரகராதி, மற்றும் பலவற்றின் பேதா பேதங்களையும் விசேஷத் தன்மைகளையும் கையாளும் வகைகளையும் பாலருக்குத் தெரிவிக்க வேண்டும். 'பக்கம் பார்க்க' என்றும், வேறு தலைப் பில் சுட்டிக் காட்டுவதன்

பொருளையும் அறிவித்தல் அவசியம். இப்படி அகராதி, நிகண்டுகளில் எவை எவ்வளவு தூரம் நம்பிக்கை தருவன என்பதையும், அவை எவ்வெக் காலத்தில் கணிக்கப்பட்டன என்பதையும், எப்போது பதி வாயின என்பதையும், அத னால் ஏற்படக்கூடிய வித்தி யாசங்களையும் விளக்க வேண் டும். பல்வேறு பாகங்களில் பிரசுரிக்கப்பட்ட அகராதியின் வெளிப்புறத்தில் காணப்படும் 'பாகத் தலைப்பு'க்களையும், இந்நூல் களில் இருக்கக்கூடிய குறிப்பகராதிகளின் நன்மையை யும் விளக்க வேண்டும்.

அகராதிகளைத் தவிர தேசப்படங்கள், ஆண்டுமலர் (year book), நாள் வருஷ விளக்கம், 'யார், எது' என்பவை போன்ற பல தகவல் புத்தகங் கள் உள்ளன. அவை தேசாந்தர அமைப்புக்களையும், வருஷாந் தர நடைமுறைகளையும், சில பொதுவான தகவல்களையும் முறையே தருகின்றன. தேசப் படப் புத்தகத்திலுள்ள குறிப்ப கராதி ஓரிடத்தைக் கண்டு பிடிக்கச் சௌகரியப்படும். சில, கிரகணங்கள் ஏற்படும் விதம் போன்ற பல சம்பந்தப் பட்ட விஷயங்களையும் காட்டும். 'யார், எது' என்பது நவீன ஆங்கிலச் சம்பிரதாயப் படி வகுக்கப்பட்டதாகும். சில, இந்தியப் பெரியார்களின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கத் தையும் பல மாகாணங்களின் ஜனத்தொகை, ஆட்சிமுறை மற்றும் பல விஷயங்களையும் கொண்டிருக்கின்றன. ஆகவே, பையன்களிடம் எட்னா எரி மலை எங்கிருக்கிறது, அருணந்தி சிவாசாரியார் யார், அம்பேத்கார் எப்போது சட்ட மந்திரியானார் என்றெல்லாம் கேள்வி கேட்டு அவர்களுக்குத் தகவல் தானாகவே தெரியும் முறையில் பழக்கப்படுத்த வேண்டும்.

பெரிய புத்தகங்களைத் தவிர, பற்பல விஷயங்களைக் குறித்து அவ்வப்போது பத்திரி கைகளில் வருவதைக் கத்தரித்து விஷயவாரியாகச் சேர்த்து வைக்கலாம். பல விஷயங் களைப் பற்றிச் சில்லறைத் துண்டுப் பிரசுரங்களும் வெளி வருவதுண்டு. அவற்றை விஷய வாரியாகச் சேர்த்து வைத்து, வேண்டும்போது சுளுவில் எடுக் கும் ரீதியில் வைக்கவேண்டும். இவ்விஷயத்தில் சிறுவர் களையே ஈடுபடவும் செய்ய லாம். இதனால் பையன்களி டம் தம் சொந்தத்திலேயே சில அத்தியாவசியமான புத்தகங் களை வாங்கி வைத்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை ஏற்படும். அப்படி மாணவன் தனக்காகப் புத்தகங்

களை வாங்குவானானால், எப்பேர்ப்பட்ட புத்தகம் வாங்க வேண்டும் என்று பொறுக்கக் கூடிய சக்தியை அவனிடம் கிளப்ப வேண்டும். இதற்குக் கம்பெனி கியாட்லாக், பத்தி ரிகைகளில் வரும் மதிப்புரை கள், சென்னைப் புத்தக சாலைப் பிரசார சங்கத்தார் வெளியிட்டுள்ள பொறுக்கான புத்தக ஜாபிதா இவை பயன்படும். பையன்கள் புத்தகங்களின் பைண்டுதரா தரம், அச்சு எழுத்துக்களின் அளவு, காகிதத்தின் தன்மை பார்த்து வாங்குவது நல்லது. நல்ல பைண்டு அதிக நாட்கள் நீடிக்கும். பெரிய எழுத்தில் இருந்தால் படிக்கச் சௌகரி யப்படும். நல்ல காகிதத்தில் அச்சடித்திருந்தால் ஆயுள் அதிகம்.

ஒவ்வொரு மாணவனும் தான் படித்த புத்தகங்களைக் குறித்து அவ்வப்போது குறிப்பு கள் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். குறிப்பெடுப்பதில் அவன் அடைந்த பலனையும் காணப்படும் புது வார்த்தை களையும், அதற்கான பக்கம் முதலியவற்றுடன் குறித்து வைக்கவேண்டும். இக்குறிப்புக் களை விஷயத்திற்கு ஒரு காகிதம் என்றபடி தனித்தனித் துண்டுக் காகிதங்களில் எழுதி விஷயவாரியாக அடுக்கி வைத் துக் கொள்ளலாம். ஆசிரியர் கள் பையன்களைப் புத்தகக் கடைகள், பைண்டிங் ஆபீஸ், அச்சுக்கூடம் ஆகிய இடங் களுக்கு அழைத்துச் சென்று காட்டினால், அவர்களுக்கு இவை பற்றி மனசில் நன்கு பதிய ஏதுவாகும்.

புத்தகங்களைத் தவிர தினசரி, வார, மாதப் பத்திரி கைகள் நாள் பிடிக்குமாதலால் சமீப காலத்திய விஷயங்களை யும், முன்னேற்றங்களையும் அறிய அவையே பெரிதும் பயன்படும். இத்தகைய பத்திரி கைகளுக்கும், சஞ்சிகைகளுக் கும் ஆண்டு இறுதியில் வருஷாந்தரக் குறிப்பு (Index) சில சமயம் பிரசுரிக்கப்படு கிறது. இது அந்த ஆண்டில் அந்தச் சஞ்சிகையில் வெளி வந்த விஷயங்களின் தலைப்புக் கள் அனைத்தையும் சுளுவில் வாசகருக்குத் தெரிவிக்கும். சில சமயம் சில சஞ்சிகைகளின் இதழ்கள் தனித்தனியே வெளி வந்தாலும் ஒன்றுக்கொன்று தொடர்ந்து பக்க எண் போடப் பட்டிருக்கும். இவற்றைச் சிறு வருக்கு விளக்குதல் அவசியம்.

✶ பாலருக்கு என்று ஏற் பட்ட புத்தகசாலை இருக்கு மேயானால் இதை எல்லாம் போதிப்பதும் விளக்குவதும் சுளுவு. பாலர் புத்தகசாலையில் மேஜைகள் நாற்காலிகள் புதிதாகத் தட்டுகள் இவை

யாவும் அவர்கள் உயரத்திற் கேற்பச் சிறியவைகளாக இருக்க வேண்டும். பெரிய பையன்களுக்கு வகுப்பு ஆசிரியரோ அல்லது புத்தக சாலை அதிகாரியோ இவ் விஷயங்களை விளக்கலாம். சிறிய வகுப்பு மாணவருக்குக் கதை சொல்லும் 'அத்தை'ப் பாட்டியே ஏற்றவர். பாலர்கள் பிரிவில் அவரவர் தராதரத் துக்கு ஏற்பப் புத்தகங்கள் தனித்தனித் தொடராக வைக் கப்பட்டிருப்பதைக் காட்ட வேண்டும். பையன்களும் பரஸ் பரம் உதவிக்கொள்ள விட வேண்டும். இது அவர்களின் பிற்கால வாழ்வில் பெரிதும் பயன்படும்.

✶ சிறுவர் நூலகம்

நன்றாக எழுதுதல் என்பது நன்றாகச் சிந்தித்தல், நன்றாக உணர்தல், நன்றாகத் தெரிவித்தலாம். அதாவது அறிவு, உயிர்த் துடிப்பு, நல்ல சுவைத் திறன் ஆகியவை ஒருங்கே வேண்டும்.

_ பஃப்பன்.

சில புத்தகங்களை ருசி பார்க்க வேண்டும். சிலவற்றை மெல்லாமல் விழுங்கிவிட வேண்டும். சிலவற்றை நன்றாய்ச் சுவைத்து மென்று விழுங்கிச் செரிக்க வேண்டும்.

_ பேகன்.

அவன் தான் படித்ததில் ஒவ்வொன்றிலுமிருந்தும் அவன் மதிப்புயர்ந்த விஷயம் எதையாவது எடுத்துக் கொண்டான்.

_ பிளினி

எழுத்தாளர் சங்க ஆண்டு விழா

சென்னை, ஜுன் 4 - அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் மூன்றாம் ஆண்டு விழா ஞாயிற்றுக் கிழமை சென்னை பிலிம் சேம்பர் அரங்கத்தில் நடை பெற்றது.

வேளாண்மைத் துறை ஆராய்ச்சியாளர் எஸ்.எஸ். நாகராஜன், தொழிலதிபர் வி.ஜி. சந்தோஷம், போட்டோ கலை நிபுணர் யோகா, திரைப் படக் கலைஞர் பி. லெனின் ஆகியோருக்கு 'சாதனைச் செல்வர்' விருது வழங்கப்பட்டது. நல்லி குப்புசாமி செட்டியார், கே.என். வேங்கடேஸ்வரன், ஏ. கோதண்ட ராமய்யா, மதர் எர்த் பிளான்டேஷன் நிர்வாக இயக்குநர் இரா. சோமு ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

முன்னதாக சங்கத்தின் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர்கள் சங்கத்தின் சென்னை மாவட்டக் கிளையின் தலைவராக விக்கிரமனும், செயலாளராக பி.எஸ். ராஜேந்திரனும், பொருளாளராக நாகராஜகுமாரும் வரும் மூன்றாண்டுகளுக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டனர்.

உயிருள்ள ஒரு மனிதனைத் தவிர புத்தகத்தைப் போல ஆச்சரியமானது வேறு எதுவுமில்லை! அது முன்னால் இறந்து போனவர்கள் நமக்களித்துள்ள செய்தி. அந்த ஆன்மாக்களை நாம் பார்த்ததேயில்லை. ஒருவேளை அவர்கள் ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் வாழ்ந்தவர்களாக இருந்திருக்கக்கூடும். எனினும் அந்தச்சிறு காகிதங்கள் நம்மிடம் பேசுகின்றன. பயமுறுத்துகின்றன, நமக்கு கற்பிக்கின்றன, ஆறுதலளிக்கின்றன, சகோதரர்களைப் போல நமக்குத் தம் இதயங் களைத் திறந்து காட்டுகின்றன.

- சார்லஸ் கிங்ஸ்லே.

Edited Printed and Published by NOOLAGAGNANI Dr. Pa. PERUMAL M.A.,M.Lib.sc., Ph.D., From 6, Mu.Va. Street, Arumbakkam, Madras - 600 106. Ph: 4845034. Printer P. AYYASAMY at Thirumalai Deivam Art Printers, 14, Yadaval Street, Aminjikarai, Madras - 600 029. Laser by Galaxy Computer System. Ph: 483 25 71.

Please send Annual Subscription Rs. 120.



மெர்வினின்
எழுத்தாளர்
கலைக்
களஞ்சியம்

NOOLAGAM ILAKKIYAM Tamil Monthly June, 1996
Regd No. TN / MS / N / 922 R.Dis 4441 / 95.E. Phone No : 484 5034